மலர்-1 இதழ்-2 செப்டம்பர் 15-30 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக வெளிவரும் இமெயில் புத்தகம்



## புரட்டாசி சைவ மாதமா?

## மஹாளய அமாவாசை சிறப்பு செய்திகள்

# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

## வரலாறும் சிறப்புகளும்

## கற்போடு வாழ வேண்டும்

# மக்கள் மனதில் பதிய வைக்க தோன்றியவையே புராணங்கள்

மனித வாழ்க்கையின் நிலைகளையும் அதன் தத்துவங்களையும் இந்து மதம் எவ்வாறு விளக்குகிறது? உதாரணமாக இந்து மத இதிகாசங்கள் அனைத்திலும் இரண்டு (extreme) நிலைகள் அல்லது துருவங்களைக் காணலாம்.

மகாபாரதத்திலும், ராமாயணத்திலும் நல்லவர்கள் ஒரு பிரிவாகவும், கெட்டவர்கள் மற்றொரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருப்பது ஏன்? எதனை முன்னிருத்த இத்தகைய கதைகள் கூறப்பட்டிருந்தன. அறுபது மனைவிகளைக் கொண்ட தசரதனை ஏன் சித்தரித்தனர்? மனித வாழ்வில் இது சாத்தியமா? அப்படி வாழலாமா என்கிற கேள்விகளை விட, அவனது மகன் ராமனை ஏகப்பத்தினி விரதன் என்றார்கள்.

இரண்டையும் இரண்டு துருவங்களாக்கிக் காட்டினார்கள். இரண்டு வாழ்க்கையிலே எந்த வாழ்க்கை சரி? எது நியாயம் என்பதை அவர்கள் போதிக்க வரவில்லை! அந்த வாழ்க்கையை ஏற்றுக்கொண்டான் தசரதன், இந்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டான் ராமன். ஆனால் இந்த வாழ்க்கையை ஏற்றுக்கொண்ட ராமனை தெய்வம் என்று இராமாயணம் அழைத்தது. ஆகவே அது சொல்லாமல் சொன்ன தத்துவம் "ஏகப்பத்தினி விரதனாகும்". அந்த ஏகப்பத்தினி விரதன் என்று அவனை சொல்லுவதற்கு எவ்வளவு அற்புதமான உவமைகள், உவமை நயங்களில் இதை சொல்லியுள்ளனர்.

ராமாயணத்தில் ராவணன் சீதையை மயங்க வைக்க பல்வேறு வேஷங்கள் போடுகிறான். இளவரசனாக வருகிறான், மன்மதன் போல் வருகிறான், பல்வேறு நாட்டு இளவரசர்கள் போலத் தோற்றமளிக்கிறான். எதிலேயும் அவள் மயங்கவில்லை. மயங்கவில்லையே சீதை என்று கலங்கிப் போய் அரண்மனையிலே உலாவிக் கொண்டிருக்கிறான். அப்போது அமைச்சர் அங்கே வருகிறார். அமைச்சர் சிரித்துக் கொண்டே அவனிடம் சொல்லுகிறார், "அரசே சீதை மயங்கக் கூடியது ஒரே ஒரு மனிதருக்கு மட்டுமே, ஒரே ஒரு உருவத்திற்கு மட்டுமே! அது ஸ்ரீராமருடைய வேஷம். அந்த வேஷத்தை நீ எடுத்தால் மட்டுமே அவள் மயங்குவாள்" என்று அமைச்சர் சொல்லுகிறார்.

உடனே ராவணன் அவரைப் பார்த்துச் சொல்லுகிறார், "அமைச்சரே உமக்கு தெரி கின்ற இந்த உண்மை எனக்கு தெரியாமல் போயிருக்குமா? நானும் ராமனைப் போலவே வேஷமிட்டு, ராமனாகவே தோற்றமளித்தேன். ஆனால் ராமனுடைய வேஷத்தைப் போட்ட வுடனேயே எனக்கு சீதையின் மீது, இன்னொரு வன் மனைவியின் மீது ஆசை வரவில்லையே நான் என்ன செய்வேன்? என்று அவன் வருந்தினான்.

ஏகப்பத்தினி விரதன் என்பதை ஒரு வார்த்தையாகச் சொல்லாமல், அதை ஒரு கதையாக உலவ விட்டு சாதரணமான மக்களுக்கும் புரிந்துக் கொள்ளக்கூடிய வகை யில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் படித்தவர் களோ, படிக்காதவர்களோ, யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு சில விஷயங்களைப் புரிய வைக்க இந்து மதம் முயன்றது.

அருந்ததியின் கதை, நளாயினியின் கதை, அசூரியையின் கதை, அகலிகையின் கதை இந்தக் கதைகள் எல்லாம் கற்பனைகளாகவே வைத்துக் கொண்டாலும், இவையெல்லாம் கற்போடு வாழ்ந்த சில பெண்களின் வாழ்க்கையைக் குறிப்பது. இவை கற்போடு வாழ வேண்டும் என்ற எண்ணத்தை இந்து பெண்கள், ஆண்கள் மனதிலே உண்டாக்குவதற்காக ஏற்பட்டவை.

அர்த்தமுள்ள இந்துமதம்–2









ஆன்மிகமலர் மெயில் புக்



# பித்ரு தோஷத்தை போக்கும் வெள்ளைப் பிள்ளையார்

பித்ரு தோஷ நிவர்த்திக்கு ஏற்ற தலமாக பூவாளூர் விளங்குகின்றது. தென்புலத்தாரின் ஆன்மா சாந்தியடைய, அவர்கள் இறந்த நாளில் ஆண்டுதோறும் திதி கொடுக்க வேண்டும். ஏதேனும் காரணத்தால் திதி கொடுப்பது தவறிப் போனால், அமாவாசை நாள்களில் பூவாளூர் வந்து, அருகில் ஓடும் கயா பல்குனி (தற்போது இந்த ஆறு "பங்குனி ஆறு' என்று அழைக்கப்படுகிறது) ஆற்றில் நீராடி, திதி கொடுக்கலாம். பின்பு இக்கோயிலில் உள்ள வெள்ளை விநாயகருக்கு அருகம்புல் அர்ச்சனை செய்தால், "பித்ரு தோஷம்' நீங்கும் என்பது ஐதீகம்.

கயா பல்குனி ஆற்றில் குளிப்பது, கங்கையில் குளிப்பதற்கு ஈடான புண்ணியத்தை அளிக்கும் என்கின்றனர்.



www.aanmeegamalar.com



# பித்ரு சாபம், தோஷம் எப்படி உண்டாகிறது?

நாம் நமது முன்னோர்களின் பாவத்தினை அனுபவித்தால், நம் முன்னோர்களின் புண்ணியத்தினையும் அனுபவித்தே ஆக வேண்டும். நம் முன்னோர்களின் பாவமும் நம்முடைய பாவமும் சேர்ந்து தலைமுறை தலைமுறைகளாக நம்மை பின்தொடர்கின்றன என்பதே உண்மை ஆகும்.

அவ்வாறு நாம் பாவங்களை அனுபவிக்கும் காலத்தில் ஒரு சில நன்மைகளும் நமக்கு விளையும். அவை நம்முடைய புண்ணியம் மற்றும் நம் முன்னோர்கள் செய்த புண்ணியத்தினால் விளையும் நன்மைகள் ஆகும். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய முன்னோர்களின் பாவத்தினையும், நம்முடைய பாவத்தினையும் அழித்து நம் முன்னோர்கள் மற்றும் நம்முடைய ஆன்மாக்கள் நற்கதி அடையுமாறு செய்தல் வேண்டும். நமது பித்ருக்களின் ஆன்மா நற்கதி அடைய தக்க பரிகாரங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## பித்ரு தோஷம் எதனால் வருகிறது?

பித்ரு தோஷம் நாம் நம் முற்பிறவிகளில் செய்த பாவங்களினாலும், நமது முன்னோர்கள் செய்த பாவங்களினாலும் ஏற்படுகிறது.

ஒரு ஆண் தன் முற்பிறவியில் தனது மனைவியை கவனிக்காமல் வேறு பெண்ணின் மோகம் கொண்டு அலைந்ததால் இப்பிறவியில் தனது மனைவியால் பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது.

ஒரு பெண் தன் முற்பிறவியில் தனது கணவனை கவனிக்காமல் வேறு ஆணின் மோகம் கொண்டு அலைந்ததால் இப்பிறவியில் தனது கணவனால் பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது.

ஒருவர் தன் முற்பிறவியில் தனது பெற்றோர்களை கவனிக்காமல் இருந்தால் பெற்றோர்கள் இடும் சாபம் மறுபிறவியில் பித்ரு தோஷமாக மாறுகிறது.

ஒருவர் தன் முற்பிறவியில் தனது சகோதர / சகோதரிகளுக்கு துன்பம் இழைத்திருந்தால் இப்பிறவியில் தனது சகோதர / சகோதரிகளால் பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது.

ஒருவர் தன் முற்பிறவியில் கருச்சிதைவு செய்திருந்தால் இப்பிறவியில் மகப்பேறு இல்லாமல் சந்ததி விருத்தியடையாமல் போகும் நிலையும் அமைகிறது.

பிதுர் தோஷம் தன்னையும், தன்னைச் சேர்ந்த





குடும்பத்தையும், குழந்தைகளையும் பாதிக்கும். நோய்கள், தேவையற்ற வம்புகள், கணவன் மனைவி பிரச்னைகளை உருவாக்கும்.குறைந்தது மூன்று தலைமுறைகள் பாதிப்படையும்.

மகாளய பட்சம் என்று ஒரு காலம் தமிழ் வருடத்தில்ஆண்டுக்கு ஒருமுறை வரும். புரட்டாசிமாதத்தில் வரும் அமாவசையிலிருந்து முன்னதாக பிரதமை ஆரம்பித்து வரும் பதினைந்து நாட்களாகும். இந்த 15 நாட்களில் பித்ருக் கள் பூமிக்கு வந்து தனது சந்ததியினருக்குஆசி வழங்கு வார்கள்.அந்த 15 நாட்களில் நாம் பித்ரு தர்ப்பணம் செய்தால் அந்த தர்ப்பணம் நேரடியாக நமது பித்ருக்கள் அதை ஏற் றுக்கொள்வார்கள். பட்சம் முழுவதும் செய்ய முடியாத வர்கள் மகாபரணியிலும் அமா வசையன்றும் செய்தால் கூட போதும்.

ஒருவர் தன் முற்பிறவியில் தனது பெற்றோர்களை கவனிக்காமல் இருந்தால் பெற்றோர்கள் இடும் சாபம் மறுபிறவியில் பித்ரு தோஷமாக மாறுகிறது

ஆடி அமாவாசை மற்றும் தை அமாவாசை நாட்களிலும் பிதுர்களுக்கு செய்யும் தர்ப்பணம் மற்றும் தானங்கள் நமது அனைத்து தோஷங்களையும் நீக்கும்.மிகக்கடுமையான பிதுர் தோஷம் உடையவர்கள் இராமேஸ்வரம் சென்று திலா ஹோமம் செய்வது அவசியம்.

இந்த திலா ஹோமம் வேதம் அறிந்த பண்டிதர் களால்தான் செய்ய வேண்டும். திலா ஹோமம் எனப்படுவது நெல்லையும் எள்ளையும் கலந்து செய்யப்படும் ஹோமம் ஆகும். திலம் என்றால் எள் என்று அர்த்தம்.திலா ஹோமம் செய்பவர்கள் அன்று இரவு இராமேஸ்வரத்தில் தங்க வேண்டும். நேராக வீட்டுக்கு எடுத்துச் செல் வது தவறு. சிரத்தையுடன் செய்தால் தான் முழுப்பலனும் கிடைக்கும்.

வைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்த வர்கள் ராமேஸ்வரம் அருகில் உள்ள திருப்புல் லாணிக்கரையில் திலாஹோமம் செய்து பித்ருக் களின் ஆசிர்வாதம் பெறலாம். கேரளாவில் திருவனந்தபுரம் அருகில் உள்ள சுராம க்ஷேத்ரம் என்ற ஸ்தலம் உள்ளது. அங்கும் பித்ருக்களுக்குதர்ப்பணம் செய்யலாம்.

பிதுர்சாந்தி செய்யாமல் செய்கின்ற எந்த பூஜைகளும் பலன் கொடுப்பதில்லை. கேரளாவில் பிதுர்சாந்திக்கு ஜென்ம நட்சத்திரத்தன்று பசுவுக்கு பருத்திக்கொட்டைபால் எடுத்து வெல்லம் கலந்து பித்ருக்களை வேண்டி உண்பதற்குக் கொடுக்கின்றனர். வாழ்வில் ஒவ்வொருவரும் ஒருதடவையாவது காசி, கயா, இராமேஸ்வரம் சென்று பிதுர் ஹோமம் செய்ய வேண்டும்.

பித்ரு சாபம் நீங்க, பூர்வ ஜன்ம பாவங்களின் தீய விளைவுகள் தீர ஞாயிற்றுக்கிழமை வரும் அமாவாசை அன்று சிறப்பு. இயன்ற வரை ஞாயிறு தோறும் செய்துவர பூர்வ ஜன்ம பாவங்கள் தீரும், சுப காரியங்களில் தடை நீங்கி நினைத்த காரியங்கள் கை கூடி வரும்.ஜாதகத்தில் பித்ரு சாபம் உடையவர்கள் இதைச் செய்ய பித்ரு சாபம் நீங்கி வாழ்வில் மங்களமான நிகழ்வுகள் நடக்கத் தொடங்கும். காலைக்கடன்களை முடித்துக் குளித்தபின் ஈர வஸ்திரத்துடன் சூரியனை நோக்கி கை கூப்பி நின்று கீழ்க்கண்ட மந்திரத்தை 108 முறை ஜெபிக்கவும்.

மந்திரம்:

ஹரி ஓம் ஹ்ராம் ஹ்ரீம்
சஹசிவ சூரியாய
வா வா ஐயும் கிலியும் சவ்வும் வசி வசி
ஸ்வாஹா





# சந்திராஷ்டம நாட்களும் கணக்கிடும் எளிய முறைகளும்

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பேப்பர் படிக்கும் பொழுதும் சரி, காலையில் தினசரி காலண்டரை காணும்போது சரி, அதில் ராசிபலன் பக்கத்தில் கீழே இன்று சந்திராஷ்டமம் பெறும் ராசி என்று போடப்பட்டிருக்கும். ஆனால் நமக்கு அதைப்பற்றி தெரியாததால் பெரும்பாலானோர் அதை பொருட்படுத்துவது இல்லை.

ஒரு ஜாதகத்தை எடுத்துக் கொண்டால் மிக முக்கியமாக இருப்பது லக்னமாகும். இதற்கு அடுத்த நிலையை பெறுவது ராசியாகும். பிறந்த ராசி என்பது நாம் பிறக்கும்போது சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறதோ, அந்த நட்சத்திரம் அமைந்துள்ள வீட்டைக் குறிப்பதாகும்.

சந்திரன் எந்த இடத்தில் இருக்கிறதோ அதைத்தான் நாம் ராசி என்கிறோம். நீங்கள் பிறந்த ராசிக்கு எட்டாமிடமான அஷ்டமஸ்தானத்தில் சந்திரன் வருமானால், அதையே சந்திராஷ்டமம் என்கிறோம்.

சந்திராஷ்டமம்=அஷ்டமம்+ சந்திரன்

உங்கள் ராசிக்கு எட்டாம் இடத்தில் இருக்கும் இரண்டேகால் நாட்களைத்தான் 'சந்திராஷ்டம' காலம் என்கிறோம். அதிலும் குறிப்பாக நீங்கள் பிறந்த நட்சத்திரத்திற்கு 17வது நட்சத்திரத்தில் சந்திரன் சஞ்சாரம் செய்யும் காலம்தான் சந்திராஷ்டமம் ஆகும்.

பொதுவாக எட்டாம் இடம் என்பது சில தடைகள், மனச்சங்கடங்கள், இடையூறுகள் போன்றவற்றை ஏற்படுத்தும் இடமாகும்.

மேலும் சந்திரன் எட்டாம் இடத்தில் இருந்து நேர் பார்வையாக தனம், குடும்பம், வாக்குஸ்தானமான இரண்டாம் இடத்தை பார்ப்பதால் அந்த ஸ்தான அமைப்புகளும் பாதிப்படைகின்றன. ஆகையால் இந்த சந்திராஷ்டம தினத்தன்று முக்கிய சுபகாரியங்களை செய்ய மாட்டார்கள்.

மணமகன், மணமகள் ஆகிய இருவருக்கும் சந்திராஷ்டம் இல்லாத நாளில்தான் திருமண முகூர்த்தம் வைப்பார்கள்,

பால் காய்ச்சுதல், கிரகப் பிரவேசம், வளைகாப்பு போன்ற நிகழ்ச்சிகளுக்கும் சந்திராஷ்டமத்தை தவிர்த்து விடுவார்கள்.

புதிய முயற்சிகள் செய்ய மாட்டார்கள்,

புதிய ஒப்பந்தங்களை தவிர்த்து விடுவார்கள்.

முக்கிய பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட மாட்டார்கள்.

குடும்ப விஷயங்களையும் பேச மாட்டார்கள்.

ஏனென்றால் சந்திராஷ்டம தினத்தன்று சந்திரனால் நம் மனதில் சில மாற்றங்கள் உண்டாகின்றன.

எதிர்மறையான எண்ணங்கள் தோன்றுகின்றன ஏனென்றால் சந்திரன் மனோகாரகன், மனதை ஆள்பவன். ஆகையால் நம் எண்ணங்களிலும் கருத்துகளிலும் நிதானமற்ற நிலை உண்டாகும்.

17ம் நட்சத்திரத்துக்கு வரும் சந்திரன். உங்களுக்குரிய சந்திராஷ்டம நாட்களை எளிதில் அறிந்துகொள்ள உதவும் பட்டியல் அருகில் கொடுக்கப்பட்டுள்ளது.

உங்கள் நட்சத்திரத்திற்கு 17வது நட்சத்திரத்தில் சந்திரன் வரும் நாளே, சந்திராஷ்டம தினமாகும். உங்கள் பிறந்த நட்சத்திரத்திற்கு சந்திராஷ்டம நட்சத்திரம் குறித்து விளக்கமாக பெட்டிச் செய்தி தரப்பட்டுள்ளது. அந்த குறிப்பிட்ட நட்சத்திர வரும் நாட்களில், நிதானமாகவும் கவனமாகவும் இருப்பது நலம் தரும்.

## சந்திராஷ்டம நாட்களை அறிய உதவும் பட்டியல்

| பிறந்த நட்சத்திரம் | சந்திராஷ்டம நட்சத்திரம் |
|---|---|
| அஸ்வினி | அனுஷம் |
| பரணி | கேட்டை |
| கிருத்திகை | மூலம் |
| ரோகிணி | பூராடம் |
| மிருகசீரிஷம் | உத்திராடம் |
| திருவாதிரை | திருவோணம் |
| புனர்பூசம் | அவிட்டம் |
| பூசம் | சதயம் |
| ஆயில்யம் | பூரட்டாதி |
| மகம் | உத்திரட்டாதி |
| பூரம் | ரேவதி |
| உத்திரம் | அஸ்வினி |
| அஸ்தம் | பரணி |
| சித்திரை | கிருத்திகை |
| சுவாதி | ரோகிணி |
| விசாகம் | மிருகசீரிஷம் |
| அனுஷம் | திருவாதிரை |
| கேட்டை | புனர்பூசம் |
| மூலம் | பூசம் |
| பூராடம் | ஆயில்யம் |
| உத்திராடம் | மகம் |
| திருவோணம் | பூரம் |
| அவிட்டம் | உத்திரம் |
| சதயம் | அஸ்தம் |
| பூரட்டாதி | சித்திரை |
| உத்திரட்டாதி | சுவாதி |
| ரேவதி | விசாகம் |



# பல்வேறு நோய்க்கு மருந்தாகும் வெந்தயம்

உணவில் அன்றாடம் நாம் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்று வெந்தயம். உணவுக்கு ருசியைக் கொடுப்பதோடு, அதில் உள்ள பல் வேறு மருத்துவக் குணங்கள் நம்மை நோய்களில் இருந்தும் பாதுகாக்கிறது.

எண்ணற்ற மருத்துவ குணங்களைக் கொண்டுள்ள வெந்தயத்தின் சிறப்புகளையும், வெந்தயத்தால் குணமாகும் நோய்களையும் பார்ப்போம்.

இரவில் தூங்குவதற்கு முன் ஒரு சிட்டிகை அளவு சுத்தமான வெந்தயத்தை எடுத்து, 200 மி.லி. அளவு தண்ணீரில் போட்டு மூடி வைத்து விடவும்.

காலையில் எழுந்ததும் வாய் கொப்பளித்த பின் தண்ணீரில் ஊறிய வெந்தயத்தை சாப்பிடுங்கள். பின் வெந்தயத் தண்ணீரை குடியுங்கள்.

கணிப்பொறியில் தொடர்ந்து பணி செய்பவர்களுக்கு உடல் சூடால் ஏற்படும் பல்வேறு உபாதைகளை போக்கும் வல்லமை வெந்தயத்திற்கு உண்டு. வாரம் ஒருமுறை வெந்தயத் தண்ணீர் குடித்து வர, உடல் சூடு, மலச்சிக்கல் என எந்த நோயும் உங்களை அண்டவே அண்டாது.

தவிர, உடலை வனப்புடன் வைப்பதில் வெந் தயத்தின் பங்கு அலாதியானது எனலாம். ஒரு தேக்கரண்டியளவு வெந்தயத்தை எடுத்துக் கொண்டு, வாணலியில் போட்டு வறுத்து, ஆற வைத்த பின் மிக்ஸியில் பொடி செய்து கொள்ளுங்கள். வெந்தயப் பொடியை ஆறிய பின் பாட்டிலில் போட்டு தேவைப்படும் போது தண்ணீரிலோ/மோரிலோ கலந்து பயன்படுத் தலாம்.

வெந்தயத்துடன், சிறிதளவு பெருங்காயத் தையும் போட்டு வறுத்து பொடி செய்த பின் ஒரு டம்ளர் வெந்நீரிலோ அல்லது மோரிலோ போட்டு பருகி வர வயிற்றுக் கோளாறுகள், அஜீரணம் போன்றவை ஏற்படாது.

மேலும் சர்க்கரை நோய் உள்ளவர்கள் தின மும் இந்த பொடியை தண்ணீர்/மோரில் கலந்து குடித்தால் சர்க்கரை நோய் கட்டுபாட்டில் இருக் கும். வெறும் வயிற்றில் இதனைக் குடிக்க வேண்டும்.

வெந்தயத்தை நன்றாக வறுத்து பொடிசெய்து காபி பொடியுடன் கலந்து காபி போட்டு குடித்தால், சர்க்கரை நோயாளிகளுக்கு சர்க்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும்.

வயிற்றுப்போக்கு ஏற்படும் பட்சத்தில், வெந்தயம் பெருங்காயப் பொடியை ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை என 3 முறை குடிக்க வயிற்றுப்போக்கு கட்டுப்படுத்தப்படும்.

மூட்டுவலிக்கு வெந்தயத் தண்ணீர் மிகவும் அருமருந்தாகும். சர்க்கரை நோய் இல்லாதவர்கள் மூட்டு வலி ஏற்பட்டால், வெந்தயப் பொடியை சிறிய வெல்ல கட்டியுடன் கலந்து சிறு உருண்டையாக்கி தினமும் 3 முறை சாப்பிட மூட்டு வலி குறையும்.

எந்த வகை ஊறுகாயாக இருந்தாலும், வெந் தயப் பொடியையும், பெருங்காயப் பொடியையும் சேர்க்க, சுவை கூடுவதுடன், உடல் உபாதைகளையும் போக்கும்.

இட்லி அரிசி, உளுந்தம்பருப்புடன் வெந்தயம் சேர்த்து அரைத்து சிறிது நேரம் ஊறிய பின் தோசையாக ஊற்றி சாப்பிட்டால், சுவை கூடுவதுடன் உடலுக்கும் ஏற்றதாக அமையும்.

மோரில் ஊற வைத்த வெந்தயத்தை தினமும் காலையில் சாப்பிட்டால், நீரிழிவு, வயிற்றுப்புண், வாய் துர்நாற்றம் உட்பட பல நோய்கள் குணமாகும். வெந்தயக் களி உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியது. கோடை காலத்தில் உடல் சூட்டில் இருந்து தப்பிக்க வாரம் ஒருமுறை வெந்தயக் களி செய்து சாப்பிடலாம்.

ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யவும் வெந்தயம் பயன்படுகிறது. பிரசவமான பெண்களுக்கு கஞ்சியில் வெந்தயத்தைச் சேர்த்து காய்ச்சிக் கொடுக்க பால் சுரக்கும்.



## முளைக்கட்ட வைத்த வெந்தயத்தின் பயன்கள்



**சத்துக்கள்:**

வெந்தயத்தை எந்த வடிவத்தில் எடுத்தாலும், அதனால் ஏராளமான நன்மைகள் கிடைக்கும். ஏனெனில் வெந்தயத்தில் வைட்டமின் சி, புரோட்டீன்கள், நார்ச்சத்து, நியாசின், பொட்டாசியம், இரும்புச்சத்து மற்றும் அல்கலாய்டுகள் போன்றவை ஏராளமாக உள்ளது. மேலும் இதில் டையோஸ்ஜெனின் என்னும் சேர்மம் உள்ளது.

**எடை குறைவு:**

தினமும் முளைக்கட்டிய வெந்தயம் உட்கொண்டு வந்தால், உடல் எடையை குறைக்கலாம். இதற்கு வெந்தயத்தில் உள்ள காலக்டோமானன் என்னும் உட்பொருள் தான் காரணம். இது தான் நீண்ட நேரம் பசி எடுக்காமல் இருக்கச் செய்கிறது. மேலும் வெந்தயத்தில் 75% கரையக்கூடிய நார்ச்சத்துள்ள உள்ளது. இது வயிற்றை வேகமாக நிரப்பி, எடையைக் குறைக்க நினைப்போருக்கு நல்ல தீர்வைத் தருகிறது.

**இதய ஆரோக்கியம்:**

முளைக்கட்டிய வெந்தயத்தை கொல ஸ்ட்ரால் பிரச்சனை உள்ள வர்கள் உட்கொண்டு வந்தால், உடலில் உள்ள அதிகப்படியான கொலஸ்ட்ரால் குறைவதோடு, இதய பிரச்சனைகள் வரும் அபாயமும் குறையும்.

**ஆன்டிவைரஸ்:**

முளைக்கட்டிய வெந்தயத்தில் ஆன்டிவைரல் பண்புகள் அதிகம் உள்ளது. இதனால் இதனை தினமும் சிறிது உட்கொண்டு வருபவர்களுக்கு, சளி, இருமல், தொண்டை பிரச்சனைகள் போன்றவை வராமல் இருக்கும்.



எங்களுடன் நீங்களும் இணையுங்கள்

www.aanmeegamalar.com

இணையதளம் மூலம்

உலக அளவில் முதன்முறையாக வெளிவரும்

இலவச e-mail-book

ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை-இமெயில் புத்தகத்தின் வாசகர்களாகிய நீங்கள் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக அன்பர்களிடம் நமது இதழையும் அதை பெறும் வழிமுறைகளையும் சொல்லி புதிய வாசகர்களுக்கு வழிகாட்டுங்கள்.

இலவச மெயில் புத்தகம் பெற



உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டிய முகவரி

aanmeegamalar@gmail.com

Whatsup no.7299992699

முடிந்த அளவு Share செய்து இத்தகவல் பரவ உதவுங்கள்





# கோவிலில் சுத்தமான நெய் தீபம் ஏற்றுவதே

## மிகச் சிறந்த பரிகாரம்



தர்ம சாஸ்திரங்கள், சம்பிர தாயங்கள், வழிபாடுகள், விரதங்கள், பிரார்த்தனைகள், வேண்டுதல்கள், பரிகார பூஜைகள் எல்லாம் காலம் காலமாக தொன்றுதொட்டு நம் முன்னோர்களால் கடைபிடிக் கப்பட்டு வரும் விஷயங்களாகும். பரிகாரம் என்பது கஷ்ட நஷ்டங்கள், இடையூறுகள், தடைகளை அகற்றி நல்வழி காட்டுமாறு கடவுளிடத்தில் வேண்டிக் கொள்வதாகும்.

திருக்கோயிலில் தீபம் ஏற்றுவது மிக சக்தி வாய்ந்த பரிகாரம் ஆகும். அதுவும் அதிகாலை, நண்பகல் (உச்சிவேலை), அந்தி பொழுதில் ஏற்றப்படும் தீபங்களுக்கு மிகவும் விஷேச சக்தி உண்டு. அதில் பல சூட்சும ரகசியங்கள் அடங்கி உள்ளன. கோவில்களில் இந்த மூன்று வேளைகளில் ஏற்றப்படும் தீபம் உடனுக்குடன் துன்ப நிவர்த்தியை தரும்.

மிக கடுமையான பிரச்சனைகளுக்கு நல்ல சுத்தமான நெய்யை, இறைவனின் கருவறையில் சுடர்விட்டு பிரகாசிக்கும் தூங்கா விளக்கில் சேர்த்து வந்தால் போதும். இப்படி தூங்கா விளக்கினை நெய்யால் மூன்று வேளைகளில் தொடர்ந்து தீபம் ஏற்றி வர நாம் எண்ணிய காரியம் நிறைவேறும்.

இத்தகைய தீபம் உடலில் இருந்து பிரிய போகும் ஒரு ஜீவனின் நேரத்தையே தள்ளிப்போடும் அளவிற்கு சக்தி வாய்ந்தது ஆகும். ஆகவே பல ஆயிரம் செலவு செய்து பரிகாரங்கள் பண்ணுவதைவிட ஒரு நெய்தீபம் ஏற்றுவது சிறந்தது.

## மாதுளையின் மகத்துவம்



1. மாதுளம் பழத்தை ஒருநாள் விட்டு ஒருநாள் அதிகாலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவந்தால் எலும்பு, பற்கள் உறுதியாகும்.

2. மாதுளம் பழத்தை, இரவு தூங்குவதற்கு மூன்று மணி நேரத்துக்கு முன் சாப்பிட்டுவந்தால் ஆண்மைக் குறைபாடு நீங்கும்.

3. மாதுளம் பழத் தோலைத் தண்ணீரில் ஊறவைத்து, அந்தத் தண்ணீரால் மலம் கழித்த பிறகு ஆசனவாயைக் கழுவினால் மூலத்தால் ஏற்பட்ட புண் குணமாகி ரத்தக் கசிவும் நிற்கும்.

4. மாதுளம் பழத் தோலை நெருப்பில் சுட்டுப் பொடியாக்கி, அதைக் கோதுமைச் சாதத்தில் கலந்து சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும்.

## தெரிந்த கோவில்கள் தெரியாத உண்மைகள்

- சோட்டானிக்கரை பகவதி அம்மன் ஒரு நாளுக்கு மூன்று விதமான ஆடைகள் அணிந்து மூன்று வடிவங்களில் காட்சி தருகிறாள். காலையில் வெண்ணிற ஆடையுடன் சரஸ்வதி தேவியாகவும்; உச்சி வேளையில் செந்நிற ஆடையுடன் லட்சுமி தேவியாகவும்; மாலையில் நீல நிற ஆடையில் துர்க்கா தேவியாகவும் காட்சி தருகிறாள். இந்த மூவகை தரிசனத்தைக் காண்பவர்கள் நினைத்தது நிறைவேறும்.
- மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் கீழ் கோபுரத்தின் நடுவிலிருந்து மேல் கோபுரத்தை நோக்கி ஒரு கோடு போட்டால், அது சிவலிங்கப் பெருமான் வழியாகச் செல்லும். அது போல் வடக்கு தெற்கு கோபுரங்களுக்கிடையே கோடிட்டுப் பார்த்தால், அது சுந்தரேசர் சன்னதியை இரண்டாகப் பகிர்ந்து செல்லும். இந்த அமைப்பு அக்கால சிற்பிகளின் அபரிமிதமான திறனை வெளிப்படுத்துகிறது.
- திருவண்ணாமலையிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது தேவிகாபுரம். இங்குள்ள பொன்மலைநாதர் கோயிலில் அருள்பாலிக்கும் கனககிரீஸ்வரருக்கு தினமும் வெந்நீரில் அபிஷேகம் செய்கிறார்கள். காலையில் இரண்டு மணி நேரம் மட்டுமே பூஜை செய்வார்கள். சிவராத்திரியன்று விசேஷ பூஜைகள் உண்டு.
- 108 திவ்யதேசங்களில் முதன்மை ஆலயமான ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமாளுக்கு அமாவாசை, ஏகாதசி, மாதப்பிறப்பு ஆகிய நாட்களில் வெந்நீரால் அபிஷேகம் செய்வார்கள். வேறு எந்த திவ்ய தேசத்திலும் இதுபோல் செய்வதில்லை.
- கும்பகோணம் நல்லம் தலத்திலுள்ள ஆலயத்தில் நடராசர் சுயம்பு வடிவில் காட்சி தருகிறார். இவர் கையில் ரேகையும், காலில் பச்சை நரம்பும் நன்கு தெரிகின்றன. இவரை சற்று தொலைவிலிருந்து பார்த்தால் 50 வயது முதியவர்போலவும், அருகிலிருந்து பார்த்தால் 30 வயது இளைஞர்போலவும் காட்சி தருகிறார்.

6. விழுப்புரத்தையடுத்த ரிஷிவந்தியத்திலுள்ள முத்தாம்பிகை சமேத அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்தின் மூலவரான லிங்கத்திற்கு தேனாபிஷேகம் நடைபெறும்போது லிங்க பாணத்தை நன்கு கவனித்துப் பார்த்தால், அம்மன் தன் கையில் கிளி வைத்துக் கொண்டு நிற்பது போன்ற தோற்றத்தைக் காணலாம். மற்ற நேரங்களில் லிங்கம் சாதாரணமாகத்தான் தெரியும்.

- ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயிலிலுள்ள உற்சவ நந்திகேஸ்வரர் அனுமன் போன்ற தோற்றத்துடன் உள்ளார். இரு கரங்களைக் கூப்பி மான், மழுவுடன் உள்ளார். மான் மழுவினை மறைத்து விட்டுப் பார்த்தால் இந்த நந்தி அனுமன் போன்றே காட்சியளிப்பார்.
- அருப்புக்கோட்டை அருகிலுள்ளது திருச்சுழி என்ற ஊர். இங்குள்ள சிவன் கோயிலில் காணப்படும் நடராசர் பச்சிலை மூலிகையால் ஆனவர்.
- தஞ்சை அருகே தென்குடித் திட்டையிலுள்ள வசிஸ்டேஸ்வரர் ஆலய கருவறை விமானம் சந்திர காந்தக்கல் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இக்கல் சந்திரனிடமிருந்து கிரணங்களைப் பெற்று நீராக்கி, அதை 24 நிமிடங்களுக்கு ஒருமுறை மூல லிங்கத்தின்மீது வீழச் செய்து அபிஷேகம் செய்கிறது. நாம் சாதாரணமாக கோயில் உண்டியலில் பணம், ஆபரணங்களைத்தான் காணிக்கையாகப் போடுவோம். ஆனால், இலங்கை கதிர்காம முருகன் ஆலயத்தில் காணிக்கையாக காசோலை (செக்) எழுதிப் போடுகின்றனர்.
- உலகிலேயே மிகவும் உயரமான முருகன் சிலை மலேசியா நாட்டின் தலைநகரான கோலாம்பூரில் இருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 140 அடி உயரம் கொண்ட சிலை இது. தமிழக சிற்பிகள் 15 பேர் சேர்ந்துதான் இச்சிலையை உருவாக்கினார்கள்.
- திருக்கண்ணமங்கை தலத்தில் உள்ள தாயார் சன்னதியில் இரு ஜன்னல்கள் உள்ளன. இதில் தேனீக்கள் கூடு கட்டுகின்றன. தை மாதம் முதல் ஆனி மாதம் வரை சூரியன் வலப் பக்கம் சஞ்சாரம் செய்யும் போது தேனீக்கள் வலப்புற ஜன்னலில் கூடு கட்டுகின்றன.
- ஆடி மாதம் புதுக்கோட்டை மாவட்டம், பரக்கலக் கோட்டை ஆவுடையார் கோயில் திங்கட்கிழமை மட்டுமே திறந்திருக்கும். நள்ளிரவு 12.00 மணிக்கு மட்டுமே வழிபாடு. பிற நாட்களில் கோயில் மூடியிருக்கும்.
- ராமநாதபுரத்திற்கு வடகிழக்கே பத்து கிலோமீட்டர் தூரத்திலுள்ள திருப்புல்லாணி ஆதிஜெகந்நாதப் பெருமாள் கோயிலில் உள்ள அரசமரம் விழுது விடுகிறது. அதன் விழுது நிலத்தில் படிந்து மரமாகி விட்டால் மூலமரம் பட்டுப் போய்விடுமாம். பிறகு புதிய மரம் வளர்ந்து விழுது விடுமாம். இப்படி ஓர் அதிசய அரசமரம் தலவிருட்சமாக பெருமை சேர்க்கிறது.
- திவ்யதேசமான திருவட்டாறில் சயனக் கோலத்திலுள்ள பெருமாளை மூன்று வாசல் வழியாக தரிசிக்க வேண்டும். முதல் வாசலில் சிரசை தரிசிக்கலாம். இரண்டாவது வாசலில் சரீர தரிசனம் பெறலாம். மூன்றாவது வாசலில் பாத தரிசனம் பெறலாம். கேரள கோயில் என்பதால் கமகமக்கும் சந்தனத்தை அரைத்து பிரசாதமாகக் கொடுக்கிறார்கள். இங்குள்ள ஆறு வட்டமாக இருப்பதால் இவ்வூருக்கு திருவட்டாறு என்று பெயர்.
- மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் நடராஜர் சன்னதிக்கு வலப்புறம் குழந்தையை (முருகனை) இடுப்பில் ஏந்திய நிலையில் உள்ள பார்வதி அம்மனை தரிசிக்கலாம். இந்த அபூர்வக் காட்சி எங்கும் காணக் கிடைக்காதது.

# முருகனை இடுப்பில் சுமக்கும் அம்மன்







# ஆறு வாசலில் காட்சிதரும் பெருமாள்



# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

## அற்புதமான வரலாறும் அதன் சிறப்புகளும்



அம்பிகையின் துதி நூல்களில் முதலிடம் வகிப்பது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். இதை உபதேசித்தவர் ஹயக்ரீவர். உபதேசம் பெற்றவர் அகஸ்திய முனிவர். உபதேசம் செய்தவரும் சாதாராணமானவர் அல்ல, உபதேசம் பெற்றவரும் சாதாரணமானவர் அல்ல.

பிரம்மதேவரிடம் இருந்து அசுரன் ஒருவன் வேதங்களைக் கவர்ந்துகொண்டு போனபோது, மகாவிஷ்ணு ஹயக்ரீவராக (குதிரை முகம் கொண்டவராக) வந்து, அசுரனைக் கொன்று, வேதங்களை மீட்டார். ஞானத்தின் வடிவமே ஹயக்ரீவர். அப்படிப்பட்டவர், லலிதா ஸஹஸ்ர நாமத்தை உபதேசம் செய்திருக்கிறார். உபதேசம் பெற்ற அகஸ்தியரின் பெருமையோ, அளவில் அடங்காது, அதில் ஒன்றை மட்டும் இங்கே பார்க்கலாம்.

சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்தபோது மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் அங்கு கூடினார்கள். அதன் காரணமாக, வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. அப்போது சிவபெருமான் அகஸ்தியரைத் தென்திசைக்கு அனுப்ப, பூமி சம நிலை பெற்றது. இந்தக் கதை அனைவருக்குமே தெரிந்ததுதான். ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியான சிவபெருமான் முதல் தேவர்கள் வரை அனைவரும் ஒரு பக்கம் இருக்க.... அகஸ்தியர் மட்டும் தென்திசை போனார். அதனால் பூமி சமநிலை ஆனது என்றால் என்ன பொருள்?

அந்தப் பக்கம் இருந்த அவ்வளவு பேருக்கும் சமமானவர் அகஸ்தியர் என்பது தானே இதன் பொருள்? அதாவது, அனைத்து தெய்வங்களுக்கும் சமமானவர் அகஸ்தியர். அப்படிப்பட்ட மகாபுருஷர் லலிதா ஸஹஸ்ரநாமத்தை உபதேசம் பெற்றிருக்கிறார்.

ஞானத்தின் வடிவமான ஹயக்ரீவர் உபதேசிக்க, அதை அனைத்து தெய்வங்களுக்கும் சமமான அகஸ்தியர் கேட்டிருக்கிறார் என்றால், ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் எந்த அளவுக்கு உயர்ந்ததாக மேன்மையானதாக இருக்க வேண்டும்.

பதினெட்டு புராணங்களில் ஒன்றாகிய பிரம்மாண்ட புராணத்தில், லலிதோபாக்யானம் என்ற பகுதியில் லலிதா தேவியின் திரு அவதாரமும், சரிதமும் கூறப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக, அன்னை பராசக்தியின் ஆயிரம் திருநாமங்களைக் கூறும் லலிதா


ஆன்மிகமலர் மெயில் புக்



ஸஹஸ்ரநாமம் என்னும் மகோன்னதமான இந்த ஸ்தோத்திரம் உள்ளது. ஹயக்ரீவர் என்ற மகரிஷி (விஷ்ணு அவதாரமாகக் கூறப்படுவதும் உண்டு) அகஸ்திய மகரிஷிக்கு உபதேசம் செய்வதாக அமைக்கப்பட்டுள்ளது. அகஸ்தியரும், அவரது மனைவி லோபாமுத்திரையும் சக்தி வழிபாட்டு நெறிகளை உருவாக்கிய குருமார்களில் முதன்மையாக வைத்துப் போற்றப்படுபவர்கள் (லோபாமுத்ரார்ச்சிதா லோபாமுத்திரையால் அர்ச்சிக்கப் பட்டவள் என்றே ஒரு நாமம் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் உண்டு). தேவியின் கட்டளைக்கிணங்க வாசினி முதலான வாக் தேவதைகளே பிரத்யட்சமாகி இந்த தெய்வீக ஸ்தோத்திரத்தைச் செய்ததாகவும் புராணக் குறிப்பு உண்டு.

ஸஹஸ்ரநாம நூல்களிலேயே தனித் துவமும், தனிச்சிறப்பும் மிக்கதாக லலிதா ஸஹஸ்ரநாமம் உள்ளது. அபாரமான கவித்துவமும், சொல்லழகும், ஓசை நயமும் கொண்டது. சாக்த நெறியின் தத்துவங்கள் பெரும் வீச்சோடும், காம்பீர் யத்தோடும் இதில் முன் வைக்கப்படுகின்றன. வேதாந்த தத்துவ உண்மைகளை மந்திரம், யந்திரம், தந்திரம் ஆகிய நுட்பமான குறியீடுகளாக வெளிப்படுத்துவது சாக்த உபாசனை. பிரம்ம வித்தை என்று வேதாந்தம் கூறும் உண்மைகளையே சக்தி உபாசகர்கள் ஸ்ரீவித்யை என்று அழைக்கிறார்கள். இந்தக் குறியீடுகளை சூனியத்தில் மிதக்க விடாமல் அவற்றுக்கு அழகும்,முழுமையும் அளிக்கும் விதமாகவும் லலிதா ஸஹஸ்ரநாமம் அமைந்துள்ளது.



லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு ஒரு குறிப்பிட்ட வடிவமும், அமைப்பும், நடையும் உள்ளது. இதில் திருநாமங்கள் கோர்க்கப் பட்டிருக்கும் வரிசையே ஒரு குறிப்பிட்ட சித்தாந்தக் கருத் தை விளக்குவதாக உள்ளது. அம்பாளின் ஆயிரத் தெட்டு நாமங்களும்,

1. ஸ்ரீமாதாவின் அவதாரம்,
2. கேசாதி பாத வர்ணனை (ஸ்தூல ரூபம்),
3. பண்டாசுர வதம்,
4. மந்த்ர வர்ணனை (சூட்சும ரூபம்),
5. குண்டலினீ ரூபம்,
6. பக்த அனுக்ரஹம்,
7. நிர்குண உபாசனை,
8. சகுண உபாசனை,
9. பஞ்சப்ரஹ்ம ரூபம்,
10. க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞ ரூபம்,
11. பீடங்களும், அங்க தேவதைகளும்,
12. யோகினீ தியானம்,
13. விபூதி விஸ்தாரமும், மார்க்க பேதங்களின் சமரசமும்,
14. சிவசக்தி ஐக்கியம்,

ஆகிய வரிசையில் பேசுபொருள்களைக் குறித்து அமைந்திருப்பதாக உள்ளது.

தேவர்களின் வேண்டுதலுக்கு இணங்கி அக்னிகுண்டத்தில் அவதரித்தவள் லலிதா தேவி. நான்கு கைகளில் பாசம், அங்குசம், கரும்புவில், மலர்க்கணைகள் ஆகியவற்றை ஏந்தியவள். இந்தப் புராண விளக்கம் தியானத்திற்குரிய தத்துவக் குறியீடாக லலிதா ஸஹஸ்ரநாமத்தின் தொடக்கத்திலேயே வந்து விடுகிறது.

சிதக்னிகுண்டஸம்பூதா அறிவாகிய அக்னி குண்டத்தில் தோன்றியவள்,

ராகஸ்வரூப பாசாட்யா ஆசை வடிவான பாசக்கயிற்றை ஏந்தியவள்,

க்ரோதாகார அங்குசோஜ்வலா தீமையைப் பொசுக்கும் கோப வடிவான அங்கு சத்தை கையில் ஏந்தி ஒளிர்பவள்,





மனோரூப இக்ஷு கோதண்டா மனமாகிய கரும்புவில்லை உடையவள்,

பஞ்சதன்மாத்ர ஸாயகா ஐந்து புலன்களாலும் உணரப்படும் ஒலி, தொடுகை, உருவம், ரசம், மணம் என்ற ஐந்து தன்மாத்திரைகளையும், ஐந்து மலர்க்கணைகளாகக் கொண்டவள். பாசக் கயிற்றால் உயிர்களை ஆசையில் பிணிப்பவளும், பின் தனது அங்குசத்தால் அதனை வெட்டி எறிபவளும் அவளே. மனமாகிய வில்லில் ஐம்புலன்களாகிய மலர்க்கணைகளைப் பொருத்தி தேவி பிரபஞ்ச விளையாட்டு விளையாடுகிறாள்!.

தத்துவ அளவில் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் தூய அத்வைத நிலையில் இருந்தே பாடப்பட்டது என்பது இந்த நாமங்களின் பெருங்கடலின் ஒரு துளியை அள்ளிப் பருகினாலே தெரிய வரும் விஷயம். நிர்த்வைதா த்வைதம் எனப்படும் இருமை நோக்கை நீக்குபவள், த்வைதவர்ஜிதா இயல்பாகவே இருமை நிலை இல்லாதவள், ஸாமரஸ்ய பராயணா சமரசத்தில் நிலை பெற்றவள் என்பனவும் அன்னையின் திருநாமங்களே. இந்த அடிப்படையான சமரச பாவத்துடனேயே ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத் தை நாம் பாரா யணம் செய்யவும், தியானம் செய்யவும் வேண்டும். அப்படி தியானம் செய்பவர்களுக்கு நிர்க் குணமும் சகுணமும், ஞானமும் பக்தியும் கர்மமும், வாமாசாரமும் தட்சிணாசாரமும், யோகமும் போகமும், கோரமும் சாந்தமும், இல்லறமும் துறவறமும் எல்லாம் அன்னையின் உள்ளத் துக்கு உகந்ததாகவும், எல்லாமாகி இலங்கும் அவளை அடைவதற்கான மார்க் கங்களாகவே திகழும்.



தத்துவங்களே அன்னையின் இருக் கைகளாகவும் (தத்வாஸனா), காற்சிலம்பின் மணி களாகவும், கையில் ஏந்தி விளையாடும் பூக்களாகவும், மகா காளிக் கோலத் தில் அவள் அணியும் மண்டையோட்டு மாலைகளாகவும் ஆகிவிடுகின்றன!

அதுவே லலிதா ஸஹஸ்ரநாமம் அளிக்கும் பரவச அனுபவம். இந்த துதியைப் பொருள் உணர்ந்து படிக்கும் போதும், தியானிக்கும் போதும் தர்க்க மனத்தின் எல்லைகளுக்கு அப்பால் அது சுழன்றடித்துச் செல்கிறது. பக்தியுடன் இதைப் பாராயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் ஏதோவொரு நாமம் நம் மனதில் ரீங்கரித்து மொழியின் சாத்தியங்களை மீறி ஒரு ஆன்மிகப் பெருவெளிக்குள் நம்மை அழைத்துச் செல்கிறது.

இவ்வளவு சிறப்புகள் பெற்று தன்னுள் அனைத்து தெய்வ சக்திகளையும் அடக்கியுள்ள லலிதா ஸஹஸ்ர நாமத்தை நாமும் கூறுவதால் இக, பர சுகத்தை எளிதாக அடையலாம்.

# மூளையை பாதுகாக்க

## எளிமையான வழிமுறைகள்




உடலில் உள்ள பாகங்கள் அனைத்தும் வேலை செய்ய கட்டளை இடுவது மூளை என்னும் ஒரு சிறிய நரம்பு மண்டலமே. உடல் உறுப்புகள் அனைத்தையும் பாதுகாக்க, இந்த உறுப்பு இந்த வேலையை செய்ய வேண்டும் என்று அவசரக் கட்டளையிடும் தன்மை மூளைக்கு உண்டு. கண்ணில் தூசி விழும் என்ற சூழலில் இமைகளை மூடவைத்து கண்ணை பாதுகாக்க கட்டளையிடுவது மூளையே...

இவ்வாறான தலைமைப் பொறுப்பை அழகாக செய்து வரும் மூளையை நாம் மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கவேண்டும்.

- காலையில் உணவு உண்ணாமல் இருப்பவர்களுக்கு ரத்தத்தில் குறைவான அளவே சர்க்கரை இருக்கும். இது மூளைக்குத் தேவையான சக்தியையும், தேவையான ஊட்டச் சத்துக்களையும் கொடுக்காமல் மூளையின் செயல்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் எனவே காலை உணவை தவிர்க்க கூடாது.
- மிக அதிகமாகச் சாப்பிடுவது, மூளையில் இருக்கும் ரத்த நாளங்கள் இறுகக் காரணமாகி, மூளையின் சக்தி குறைவுக்குக் காரணமாகும். எனவே மிதமான உணவை உட்கொள்வது அவசியம்.
- புகை பிடிக்கும் பழக்கத்தால் மூளை சுருகவும், அல்ஸைமர்ஸ் வியாதி வருவதற்கும் காரணமாகிறது.
- சர்க்கரை உணவில் அதிகம் சேர்ந்தால் நமது உடலில் புரோட்டின் சேர்வதைத் தடுக் கிறது. இதுவும்மூளை வளர்ச்சிக்கு பாதிப்பாகிறது.
- மாசு நிறைந்த காற்றை சுவாசித்தல், நமக்குத் தேவையான ஆக்ஸிஜனை நாம் பெறுவதிலிருந்து தடை செய்கிறது. மூளைக்கு ஆக்ஸிஜன் செல் லாவிட்டால், மூளை பாதிப்படையும்.
- தூங்கும்போது தலையை மூடிக்கொண்டு தூங்குவது, போர்வைக்குள் கரியமிலவாயு அதிகரிக்க வைக்கிறது. இது நாம் சுவாசிக்கும் ஆக்ஸிஜனை குறைக்கிறது. குறைவான ஆக்ஸிஜன் மூளையைப் பாதிக்கிறது.
- நோயுற்ற காலத்தில் மூளைக்கு வேலை கொடுப்பது உடல் நோயுற்ற காலத்தில் மிக அதிகமாக மூளைக்கு வேலை கொடுப் பதும், தீவிரமாகப் படிப்பதும் மூளையைப் பாதிக்கும். உடல் சரியாக ஆனபின்னால், மூளைக்கு வேலை கொடுப்பதே சிறந்தது.
- மூளைக்கு வேலை கொடுக்கும் சிந்த னைகளை மேற்கொள்ளாமல் இருப்பது மூளையை அதிகமாக உபயோகப்படுத்தும் சிந்தனைகளை மேற்கொள்வதால், மூளையில் புதுப்புது இணைப்புகள் உருவா கின்றன. அதனால், மூளை வலிமையான உறுப்பாக ஆகிறது.
- பேசாமல் இருப்பது அறிவுப்பூர்வமான உரை யாடல்களை மேற்கொள்வது மூளையின் வலிமையை அதிகரிக்கிறது





# தாயின் சொல்லுக்கு கட்டுப்படும் சனிபகவான்

சனிஸ்வரர் என்றால் அனைவருக்கும் ஒரு வித கலக்கத்தை உண்டு பண்ணும் காரணம் அனைவரையும் ஆட்டிப் படைக்கும் தெய்வமாக சனிஸ்வரர் இருக்கிறார். ஆனால் அவ்வாறு அவர் ஆட்டிப்படைப்பதிலும் ஒரு காரணம் உண்டு. ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் பக்குவம் அடைய வைப்பது, கஷ்டம், துயரம், துக்கம் போன்றவை.

ஆதிகாலத்தில் மக்கள் ஒவ் வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு தனித்திறமையை வைத்து வழிபடுகின்றார்கள். உதாரணமாக, லட்சுமியை வழிபட்டால் செல்வம் கிடைக்கும் என்றும், சக்தியை வழிபட்டால் பலமும், சரஸ்வதியை வழிபட்டால் கல்வியும் கிடைக்கும் என்று ஒவ்வொரு தெய்வ வழிபாட்டிற்கு ஒரு காரணத்தை வைத்துள்ளனர்.

அதுபோலத்தான் சனிஸ்வரர், ஒவ்வொரு மனிதனும் சுகத்தை மட்டுமே அனுபவித்து வந்தால், மற்றவர்கள் படும் அவஸ்தையோ, கஷ்டமோ அவனுக்கு தெரியாமல் போய்விடும். இதனால் மற்ற மனிதர்களுக்கு அவனால் பாதிப்பு ஏற்படும். இந்த நிலை இருக்க கூடாது என்பதற்காகத்தான், எப்பேர்பட்ட மனிதனும் சிறிது கஷ்டம் அனுபவித்தால்தான் துன்பத்தின் வலி அவர்களுக்கு தெரியும். இப்படி அவன் துன்பத்தை அனுபவிக்கும் போது வாழ்க்கையில் பக்குவம் அடைவான்.

இப்படி பக்குவம் அடைய வைப்பவர்தான் சனிஸ்வரர், இவர் ஒரு மனிதனை பிடிக்கும் நேரத்தில் அந்த மனிதன் ஆழ்ந்த தெய்வ பக்தியுடன் இருந்தால் இவரின் கடுமை குறையும், எல்லா தெய்வங்களையும் இவர் பிடித்துள்ளார். விநாயகப் பெருமானையும், ஆஞ்சநேயரையும் மட்டும் இவரால் பிடிக்க முடியவில்லை.

ராமநாதபுரத்தில் உள்ள வழிவிடும் முருகன் கோவிலில் சனிபகவானின் தாயார் சாயா தேவி உள்ளார். இங்கு அவர் `சாயாமரம்' என்ற பெயரில் மரமாக காட்சியளிக்கிறார். இக்கோவிலுக்கு வந்து சாயாதேவியை வழிபடுபவர்களை சனிபகவான் தன் கெடு பலன்களை தாயின் சொல்லுக்கு கட்டுப்பட்டு குறைத்துக்கொள்வதாக ஐதீகம்.



## சிவபுராணம் சுட்டிக்காட்டும்

# மனித இறப்பிற்கான அறிகுறிகள்

இவ்வுலகில் பிறப்பு என்ற ஒன்று இருந்தால், இறப்பு என்ற ஒன்று நிச்சயம் இருக்கும். பிறப்பை கண்டு மகிழும் நாம், இறப்பைக் கண்டு அச்சமடைவோம். சாதிக்கும் யாருக்கும் இறக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்காது. இருப்பினும், நிச்சயம் ஒரு கட்டத்தில் அனைவரும் இறக்க நேரிடும். அதை யாராலும் தடுக்க முடியாது. அந்த வகையில் ஒரு மனிதன் இறக்கும் நிலையை அவனே அறிந்து கொள்ள வேண்டும் என்பதால், மனித இறப்பு சம்பவத்தின் போது நிகழக்கூடிய அறிகுறிகளை சிவபுராணத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

### அறிகுறி 1

எப்போது ஒருவரது சருமத்தின் நிறமானது வெளிர் மஞ்சளாகவோ அல்லது வெள்ளையாகவோ அல்லது லேசான சிவப்பாக மாற ஆரம்பித்தால், அது அவர் இன்னும் 6 மாத காலத்தில் உயிரை விடப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 2

எப்போது ஒருவனால் அவனது பிம்பத்தை எதிரொலியை தண்ணீரிலோ அல்லது கண்ணாடியிலோ தெளிவாக காண முடியவில்லையோ, அத்தகையவர்களும் ஆறு மாதத்தில் இறக்கப் போகிறார் என்பதை வெளிப்படுத்துமாம்.

### அறிகுறி 3

எப்பொழுது ஒருவனுக்கு பார்க்கும் அனைத்தும் கருப்பாக தெரிய ஆரம்பிக்கிறதோ, அவர்களும் இறப்பை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 4

ஒருவரது இடது கை மட்டும் ஒரு வாரத்திற்கு மேல் துடிக்கவோ அல்லது நடுங்க ஆரம்பிக்கிறதோ, அவர்கள் ஒரு மாதத்திற்கு மேல் உயிருடன் இருக்கப் போவதில்லை என்று அர்த்தமாம்.



### அறிகுறி 5

ஒருவரின் உணர்ச்சிமிக்க உறுப்புக்கள் இறுக்கமடைந்து கல் போன்று மாறுகிறதோ, அவர்களும் இன்னும் கொஞ்ச மாதத்தில் இறக்கப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 6

நிலா, சூரியன் அல்லது நெருப்பின் ஒளியை சரியாக காணமுடியவில்லையோ, அத்தகையவர்களும் விரைவில் மரணத்தை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 7

எப்போது ஒருவரின் நாக்கு வீக்கமடைந்து, ஈறுகளில் சீழ் கட்ட ஆரம்பிக்கிறதோ, அவர்கள் இவ்வுலகில் நீண்ட நாட்கள் வாழப் போவதில்லை என்று அர்த்தம்.

### அறிகுறி 8

ஒருவரால் வானத்தில் உள்ள போல் நட்சத்திரங்களை காண முடியவில்லையோ, அவரும் ஆறு மாதத்தில் இறக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 9

சூரியன், நிலா மற்றும் வானத்தை பார்க்கும் போது, அவை சிவப்பாக தெரிய ஆரம்பித்தால், அத்தகையவர்களும் விரைவில் மரணத்தை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 10

ஒருவரின் கனவில் ஆந்தையோ, வெற்றிடமோ அல்லது கிராமம் அழிவது போன்றோ வந்தால், அவரும் மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தமாகும்.





## புரட்டாசி

# சைவ மாதமா?

புரட்டாசி மாதத்தை சைவ மாதமாக முன்னோர்கள் மாற்றியதற்கான அற்புதக் காரணங்கள் உள்ளன.

புரட்டாசி மாதம் வெயிலும் காற்றும் குறைந்து மழை ஆரம்பிக்கும் மாதம்.

ஆனால் பூமி குளிர மழை பெய்யாது. பல மாதம் வெயிலால் சூடாகியிருந்த பூமி மழைநீரை ஈர்த்து வெப்பத்தை குறைக்க ஆரம்பிக்கும்.

அதனால்தான் இந்த மாதத்தை சூட்டை கிளப்பிவிடும் மாதமாக புரட்டாசியை கூறுவார்கள்.

இது வெயில் கால வெப்பத்தை காட்டிலும் கெடுதல் தரக்கூடியது. இந்த நேரத்தில் அசைவம் சாப்பிடுவது உடல் சூட்டை அதிகப்படுத்தி உடல் நலத்தை குறைக்கும். வயிறு சம்பந்தமான பிரச்சனையை ஏற்படுத்தும். அது மட்டுமன்றி சரிவர பெய்யாத மழை திடீர் வெப்ப மாறுதல் நோய்கிருமிகளை உருவாக்கிவிடும். காய்ச்சல் சளி தொந்தரவு அதிகரிக்கும்.

இதுபோன்ற சளி தொந்தரவை துளசி இலை கட்டுப்படுத்தும். இதற்காகவே புரட்டாசியில் விரதம் இருந்து (அசைவம் ஒதுக்கி) பெருமாள் கோவிலுக்கு போகும் வழக்கத்தை ஏற்படுத்தினர். மேலும் அந்த மாதத்தில் பெருமாள் கோவிலில் வழங்கப்படும் தீர்த்தமும் இயற்கை மருத்துவ குணத்துடன் தயாரிக்கப்படுவதால், துளசியும் தீர்த்தமும் பக்தர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வெகுவாக அளிக்க உதவும்.

இதுபோன்ற பல்வேறு நல்ல விஷயங்கள் மக்களுக்கு பயன்பட வேண்டும் என்ற காரணத்தால்தான் புரட்டாசி மாதத்தை பெருமாளுக்கு உகந்த மாதமாக மாற்றி, மக்களுக்கு நன்மை பயக்கும் விரத முறைகளை அனுசரிக்க முன்னோர்கள் வழிகாட்டினர்.

இந்தமாதத்தில் சைவ உணவை மட்டும் சாப்பிட்டால் பல்வேறு நோய்களிலிருந்து மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்ற நோக்கத்தில்தான் புரட்டாசியில் அசைவத்தை தவிர்த்தனர் நம் முன்னோர்கள். நாமும் இந்த மாதத்தில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறையை கடைப்பிடித்து உடலையும், மனதையும் காத்துக்கொள்வோம் வாருங்கள்.



# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், ‘நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?’ என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி ‘நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?’ என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், ‘என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!’ என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.

முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.



எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். ‘பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்’ என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்


வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

ஆன்மிகமலர் டிரஸ்ட்
Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033








ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com



# மகிமை மிகுந்த தீர்த்தங்களை கொண்ட திருச்செந்தூர்

முருகப்பெருமானின் அறுபடைவீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் கடல் சார்ந்தது என்பதால், ஆடி, தை மற்றும் மஹாளய அமாவாசை புண்ணிய தினங்களில், இங்கு வந்து பித்ரு ஆராதனை செய்வது சிறப்பு என்பார்கள் பெரியோர்கள்.

இதுமட்டுமல்ல, இன்னுமொரு சிறப்பம்சமும் உண்டு. காயத்ரி மந்திரத்தின் 24 எழுத்துக்களும் இந்தத் தலத்தில் தீர்த்தமாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இவற்றில், கந்த புஷ்கரணி எனப்படும் நாழிக் கிணற்றில் மட்டுமே பக்தர்கள் நீராடி வருகிறார்கள்.

கடற்கரையில் அமைந்திருந்த சில தீர்த்த கிணறுகள் மணல் மூடி தூர்ந்துவிட்டன. அந்தத் தீர்த்தக் கட்டங்களைக் குறிப்பிடும் கல்வெட்டு களும் காணாமல் போய்விட்டனவாம். சிறப்புமிகு 24 தீர்த்தங்களை நாம் அறிந்துகொள்வோமா?

**முகாரம்ப தீர்த்தம்:** இதில் மூழ்குவோர் கந்தக் கடவுளின் கருணை அமுதத்தைப் பருகுவர்.

**தெய்வானை தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர் ஆடை அணிகலன், போஜனம், தாம்பூலம், பரிமளம், பட்டு, பூ அமளி என்கின்ற இன்பத்தைப் பெறுவர்.

**வள்ளி தீர்த்தம்:** இந்தத் தீர்த்தம் ஒருமையுள்ளத் துடன் பிரணவ சொரூபமாய் பிரகாசிக்கின்ற கந்தப்பெருமானின் திருவடித் தாமரையைத் தியானிக்கும் ஞானத்தைக் கொடுக்கும்.

**லட்சுமி தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர், குபேரனும் அடைவதற்குரிய செல்வங்களைப் பெறுவர்.

**சித்தர் தீர்த்தம்:** காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களும் நீங்கி முக்திக்குத் தடையாகிய உடல், உலக, பைசாச என்கிற பகை களை விலக்கி முக்தி வழியை நாடச் செய்யும்.

**திக்கு பாலகர் தீர்த்தம்:** கங்கை, யமுனை, காவிரி முதலிய தீர்த்தங்கள் கொடுக்கும் பலனைத் தரும்.

**காயத்ரி தீர்த்தம்:** அநேக வேள்விகளைச் செய்தவர் அடைகின்ற பலன்களைப் அருளும்.

**சாவித்ரிதீர்த்தம்:** பிரமாதி தேவர்களாலும் காண்பதற்கு அரிய உமாதேவியின் பொன்னடிகளைப் பூஜித்த பலனைக் கொடுக்கும்.

**சரஸ்வதி தீர்த்தம்:** சகல ஆகம புராணங்க ளையும் அறியத் தகுந்த அறிவைக் கொடுக்கும்.

**அயிராவத தீர்த்தம்:** சந்திர பதாகை முதலிய நதிகளில் நீராடிய பலனைப் பெறலாம்.

**வயிரவ தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் நீராடி யோர் பல புண்ணிய நதிகளில் மூழ்கியவர் அடையும் பலனை அடைவர்.

**துர்கை தீர்த்தம்:** சகல துன்பங்களும் நீங்கி நன்மைகிட்டும்.

**ஞானதீர்த்தம்:** இறைவனைப் பரவுவோருக்கும் பரவு வதற்கு நினைத்தோர்க்கும் நன்மையைக் கொடுத்தருளும்.

**சத்திய தீர்த்தம்:** களவு, கள்ளுண்டல், குரு நிந்தை, அகங்காரம், காமம், பகை, சோம்பல், பாதகம், அதிபாதகம், மகா பாதகம் ஆகியவற்றினின்றும் நீக்கி, சித்தத்தை நன்னெறியில் நிற்கச் செய்யும்.

**தரும தீர்த்தம்:** தேவாமிர்தமாகிய மங்கள கரத்தைக் கொடுத்தருளும்.

**முனிவர் தீர்த்தம்:** மூழ்குவோர் ஜகத்ரட்ச கனைக் கண்ட பலனைப் பெறுவர்.

**தேவர் தீர்த்தம்:** காமம், குரோதம், லோபம் மோகம் போன்ற ஆறு குற்றங்களை நீக்கி, ஞான அமுதத்தை நல்கும்.

**பாவநாச தீர்த்தம்:** சாபங்களை விலக்கி அனைத்துப் புண்ணியார்த்தங்களையும் அளிக்கவல்லது.

**கந்தபுட்கரணி தீர்த்தம் :** சந்திரசேகர சடாதரனுடைய திருவடியை முடிமிசை சூடும் மேன்மையைப் பெறுவர்.

**கங்கா தீர்த்தம்:** இத்தீர்த்தம் முக்திக்கு ஏதுவாய் பிறவிக் கடலைக் கடக்கச் செய்யும் தெப்பம் போன்றிருக்கும்.

**சேது தீர்த்தம் :** சகல பாதகத்தினின்றும் நீக்கி நன்மையைக் கொடுத்தருள வல்லது.




**கந்தமாதன தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்குப் பாவங்களைப் போக்கி பரிசுத்தத்தைத் தர வல்லது.

**மாதுரு தீர்த்தம்:** இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்கு அன்னையைப் போன்று ஆசீர்வதித்து அதிலும் பன்மடங்கு அதிகமாக பலனைக் கொடுக்கும்.

**தென்புலத்தார் தீர்த்தம்:** இதில் ஒரு தரம் மூழ்கி எள்ளும் தண்ணீரும் இறைத்தவர்களுக்கு இம்மை மறுமையும் சிறந்து விளங்க செந்தி லாண்டவன் திருவருட் கரந்து வாழும் பதத்தைக் கொடுத்தருளுவார்.

மேலும், கோயிலுக்குத் தெற்கே 200 அடி தூரத்தில் நாழிக் கிணறு உள்ளது. பெரிய கிணற்றுக்குள்ளே ஒரு சிறு கிணறாக ஒரு சதுர அடி பரப்பும் ஏழு அடி ஆழமும் உள்ள இந்தத் தீர்த்தம், உவர்ப்பு அற்ற நன்னீராகக் காட்சி தருகின்றது. சமுத்திரக்கரையோரம் இப்படி இனிய நீராக அமைந்துள்ளது கந்தப்பெருமானின் அருளாடலேயாகும். இதில் மூழ்குவோர் சகல நலன்களையும் பெறுவார்கள்.

இத்தகு தீர்த்தச் சிறப்புகள் மிகுந்த திருச்செந்தூருக்கு, ஆடி அமாவாசை மஹாளய அமாவாசைஅன்று புனித நீராடி, முன்னோரை ஆராதித்து அருள்பெற்று வருவோம்.



# 13 வகையான சாபம்
## அவற்றால் ஏற்படும் விளைவுகள்

சாபங்கள் மொத்தம் 13 வகையான சாபங்கள் இருக்கிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?!..

1. பெண் சாபம், 2. பிரேத சாபம், 3. பிரம்ம சாபம், 4. சர்ப்ப சாபம், 5. பித்ரு சாபம், 6. கோ சாபம், 7. பூமி சாபம், 8. கங்கா சாபம், 9. விருட்ச சாபம், 10. தேவ சாபம் 11. ரிஷி சாபம் 12. முனி சாபம், 13. குலதெய்வ சாபம்

அவற்றை ஒவ்வொன்றாக பார்க்கலாம்.



**1.பெண் சாபம்:** இது எப்படி ஏற்படுகிறதென்றால், பெண்களை ஏமாற்றுவதும், சகோதரிகளை ஆதரிக்காமல் இருப்பதாலும், மனைவியைக் கைவிடுவதாலும் வருகிறது. பெண் சாபம் ஏற்பட்டால் வம்சம் அழியும்.

**2.பிரேத சாபம்:** இறந்த மனிதனின் உடலை வைத்துக்கொண்டு அவரை இழிவாகப் பேசுவதும், அவருடைய உடலைத் தாண்டுவதும், பிணத்தின் இறுதி காரியங்களை செய்யவிடாமல் தடுப்பதும், இறந்தவரை வேண்டியவர்கள் பார்க்க அனுமதி மறுப்பதும் பிரேத சாபத்தை ஏற்படுத்தும். பிரேத சாபத்தால் ஆயுள் குறையும்.

**3. பிரம்ம சாபம்:** நமக்கு வித்தை கற்றுக்கொடுத்த குருவை மறப்பது, வித்தையை தவறாக பயன்படுத்துவது, மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்காமல் ஒரு வித்தையை மறைத்து வைப்பது, இவற்றான காரணங்களால், பிரம்ம சாபம் ஏற்படுகிறது. பிரம்ம சாபத்தால், வித்யா நஷ்டம் அதாவது, படிப்பு இல்லாமல் போகும்.

**4.சர்ப்ப சாபம்:** பாம்புகளை தேவையின்றி கொல்வதாலும் அவற்றின் இருப்பிடங்களை அழிப்பதாலும், சர்ப்ப சாபம் உண்டாகும். இதனால், காலசர்ப்ப தோஷமும் ஏற்பட்டு திருமணத் தடை ஏற்படும்.



**5. பித்ரு சாபம்:** முன்னோர்களுக்கு செய்யவேண்டிய திதி மற்றும் தர்ம காரியங்களை செய்யாமல் மறப்பதும், தாய் தந்தை தாத்தாபாட்டி போன்றோரை உதாசீனப்படுத்துவதும், அவர்களை ஒதுக்கி வைப்ப வைப்பதும், பித்ரு சாபத்தை ஏற்படுத்தும். பாலாரிஷ்ட சாபத்தையும் ஏற்படுத்தி, வம்சத்தில் ஆண் குழந்தை பிறக்காமல் போவது, குழந்தைகள் இறந்துபோவது போன்றவற்றை ஏற்படுத்தும்.

**6. கோ சாபம்:** பசுவை வதைப்பது, பால் மரத்த பசுவை வெட்டக் கொடுப்பது கன்றுடன் கூடிய பசுவைப் பிரிப்பது , தாகத்தால் பசு தவிக்கும் போது தண்ணீர் கொடுக்காதது போன்ற காரணங்களால் கோ சாபம் ஏற்படும். இதனால், குடும்பத்திலோ வம்சத்திலோ எவ்வித வளர்ச்சியும் இல்லாமல் போகும்.

**7.பூமி சாபம்:** ஆத்திரத்தில் பூமியை சதா காலால் உதைப்பதும், பாழ்படுத்துவதும், மண்ணை மாசுபடுத்தும் பொருட்களைப் போட்டுப் புதைப்பதும், தேவையற்ற பள்ளங்களைஉண்டு பண்ணுவதும், அடுத்தவர் பூமியைப் பறிப்பதும் பூமி சாபத்தை உண்டாக்கும். பூமிசாபம் நரக வேதனையைக் கொடுக்கும்.

**8.கங்கா சாபம்:** பலர் அருந்தக்கூடிய நீரை பாழ் செய்வதாலும், ஓடும் நதியை அசுத்தம் செய்வதாலும், கங்கா சாபம் வரும். கங்கா சாபத்தால் எவ்வளவு தோண்டினாலும் நீர் கிடைக்காது.

**9.விருட்ச சாபம்:** பச்சை மரத்தை வெட்டுவதும், கனி கொடுக்கும் மரத்தை பட்டுப் போகச் செய்வதும், மரத்தை எரிப்பதும், மரங்கள் சூழ்ந்த இடத்தை, வீடு கட்டும் மனையாக்குவதும் விருட்ச சாபத்தை ஏற்படுத்தும். விருட்ச சாபத்தினால், கடன் மற்றும் நோய் உண்டாகும்.

**10.தேவ சாபம்:** தெய்வங்களின் பூஜையைப் பாதியில் நிறுத்துவது, தெய்வங்களை இகழ்வது போன்ற காரணங்களால், தேவ சாபம் ஏற்படும். தேவ சாபத்தால் உறவினர்கள் பிரிந்துவிடுவர்.

**11.ரிஷி சாபம்:** இது கலியுகத்தில் ஆச்சார்ய புருஷர்களையும் உண்மையான பக்தர்களையும் அவமதிப்பது போன்றவற்றால் ஏற்படும். ரிஷி சாபத்தால், வம்சம் அழியும்.

**12.முனி சாபம்:** எல்லைதெய்வங்கள், மற்றும் சின்னசின்ன தெய்வங்களுக்கு வழங்க வேண்டிய மரியாதைகளையும் பூஜையையும் மறப்பது முனி சாபத்தை ஏற்படுத்தும். முனி சாபத்தால் செய்வினைக் கோளாறு ஏற்படும்.

**13. குலதெய்வ சாபம்:** இது நமது முன்னோர்கள் பூஜித்த தெய்வத்தை மறக்காமல் இருப்பது. குலதெய்வ சாபத்தால் குடும்பத்தில் ஒரு போதும் மகிழ்ச்சி ஏற்படாமல் போகும். ஒருவித துக்கம் சூழ்ந்துகொள்ளும்.

சாபம் என்பது நல்லவர்களுக்கு வரமாக மாறும். தீயவர்களை அழிக்கும். எவ்வளவு வரங்கள் பெற்றாலும், தாங்கள் பெற்ற வரத்தின் பலத்தால், நல்லவர்களை ஒரு போதும் அழிக்க முடியாது. ஆனால், ஆற்றாமல் அழுது பதறிய நெஞ்சிலிருந்து வந்த வார்த்தை சாபமாக மாறினால் எப்பேற்பட்ட வலிமையான மனிதனையும் உரு தெரியாமல் அழித்து விடும்.

# அமாவாசை பௌர்ணமி நாளில் நடைபெறும் முக்கியமான நிகழ்வுகள்?

## பௌர்ணமியில்...

பூமியும் சந்திரனும் ஒரு குறிப்பிட்ட நிலைக்கோட்டிற்கு வரும்போது ஏற்படக்கூடிய அதிர்வுகள் நேரடியாகவும் சக்தி மிகுந்ததாகவும் இருக்கும். பூரண சந்திரனின் போது, சந்திரனின் ஈர்ப்பு சக்தி மற்ற நாட்களைவிட அதிகமாக இருக்கும். அன்று அலைகள் அதிகமாக உயரும். தண்ணீர் வழிந்தோடி துள்ளிக்குதிக்கும். இதேபோல உங்களுடைய ரத்தமும் உயரமாகத் துள்ளிக் குதிக்க முயற்சிக்கிறது. அந்த நிலையில் மூளைக்குப் போகும் ரத்த ஓட்டம் அதிகமாகிறது. அப்போது, உங்கள் குணம் எதுவாக இருந்தாலும், அது அதிகரிக்கும். மனநோயால் பாதிப்படைந்தவர்களுக்கு நோயின் தாக்கம் அதிகமாகும். அதே எப்போதும் அமைதியானவராக இருப்பவர்கள் இந்த நாளில் மேலும் அமைதியானவராக மாறிவிடுவார்கள். நீங்கள் மகிழ்ச்சியானவராக இருந்தால் அன்று உங்கள் மகிழ்ச்சி மேலும் அதிகமாகும். உங்கள் குணம் எதுவாக இருந்தாலும், அது அப்படியே உயரச் செல்லும். நீங்கள் அனைவரிடமும் அன்புடன் இருப்பவர் என்றால், பௌர்ணமி அன்று உங்களுடைய அன்பு கரைபுரண்டு ஓடும்.

சந்திரன் வெளியிடும் ஒளியும், மென்மையான அதிர்வும் அதன் விளைவாக எல்லாப் பொருட்கள் மீதும் ஒரு புதிய மணம் வீசும். ஒவ்வொரு பொருளும் ஒரு புதிய ஒளியுடன் இருக்கும். சந்திரன் முழு நிலவாக இருக்கும்போது வெளியிடும் அதிர்வும் ஒளியும் மற்ற நாட்களை விட, மற்ற நிலைகளைவிட வித்தியாசமாக இருக்கும். அதேபோல் அதன் காந்தசக்தியும் வேறுபடும். உங்கள் உடல் உள்ளே செயல்படும் ஈடா மற்றும் பிங்களா ஆகிய இரண்டு சக்திகளும் வேறு விதமாக வேலை செய்யும். பிராண சக்தியின் ஓட்டமும் வேறுவிதமாக இருக்கும். உங்கள் இரத்த ஓட்டமும் சற்று வேறுவிதமாக இருக்கும். உங்களுடைய முழு சக்தியும் வேறுவிதமாக செயல்படும். அதற்குக் காரணம் அதிர்வுகளும் மாறி விடுவதால்தான்.

## அமாவாசையில்...

சரி, அமாவாசை அன்று எப்படி இருக்கும்? பௌர்ணமிக்கும் அமாவாசைக்கும் என்ன வேறுபாடு? தியானத்தின் தரம் பௌர்ணமி அன்றும் அமாவாசை அன்றும் பெருத்த வேறுபாடுடன் இருக்கும். தொடர்ந்து தியானம் செய்பவருக்கு பௌர்ணமி நல்லது. சில சடங்குகளுக்கும் சில வழிமுறைகளுக்கும் அமாவாசை சிறந்தது. அமாவாசை இரவன்று உங்களுடைய சக்திகள் முரட்டுத்தனமாக இருக்கும். மதம்பிடித்த யானைபோல உங்களுடைய சக்தி தறிகெட்டுப்போகும். அதனால்தான் அமாவாசை இரவுகளை தாந்திரீகர்கள் பயன்படுத்துவார்கள். அப்போது சக்திகள் மேலும் அதிகமாகும். பௌர்ணமி இரவுகளில் உங்கள் சக்தி சற்று அடங்கி இருக்கும். அடக்கமாகவும், இனிமையாகவும், அழகாகவும் இருக்கும் காதலைப்போல. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து சொல்லவேண்டும் என்றால், அமாவாசை என்பது பாலுணர்வு சார்ந்ததாகவும், பௌர்ணமி என்பது காதல் தொடர்புடையதாகவும் சொல்ல முடியும். அமாவாசை சற்று கரடுமுரடானது, ஆனால் சக்தி மிகுந்தது. பௌர்ணமி மென்மையான தன்மை படைத்தது. அதன் சக்தியை உங்களால் உணரமுடியாது. அந்த அளவுக்கு நுட்பமானது. குண்டலினியின் செயல்பாடும் அதேபோல்தான் இருக்கும். பௌர்ணமி தினத்தில் அது மெதுவாகவும் மென்மையாகவும் நகரும். அமாவாசை தினத்தில் அது வேகமாகவும் துள்ளிக்குதித்தும் நகரும்.

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# பித்ரு பூஜையில் பெருமாள் கலந்துகொள்ளும் அதிசயக் கோயில்

இந்தியாவில் உள்ள பல்வேறு கோயில்களில் முன்னோருக்குரிய பூஜைகள் செய்யப்பட்டாலும் ஒரு சில கோயில்கள் பித்ரு பூஜைக்கென்று தனிச்சிறப்பு பெற்றவையாகவும் விளங்குகின்றன. ஆனால் பித்ரு பூஜை மட்டுமே நடைபெறும் வகையில் எந்த ஒரு தனிப்பட்ட கோவில்களும் இந்தியாவில் கிடையாது என்று நாம் நினைப்பது தவறு.

செங்கல்பட்டு அருகில் நென்மேலி என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமாள் சன்னதி பல நெடுங் காலமாக பெரியோர்களால் வணங்கப்படுகிறது.

மேலும் இச் சன்னதியில் உள்ள உற்சவ மூர்த்தி “ஸ்ராத்த ஸம்ரக்ஷண நாராயணர்” என்னும் திருநாமமும், இந்த கிராமத்திற்கு புண்டரீக நல்லூர், பிண்டம் வைத்த நல்லூர் என்றும் இந்த சன்னதியின் திருக்குளம் அர்கிய புஷ்கரணி, ஜீயர் குளம் என்றும் காசிக்கு நிகரான க்ஷேத்ரம் என்றும் சௌலப்ய கயா என்றும் வழங்கப்படுகிறது.

இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளுக்கு மத்தியம் 12 மணி முதல் 1.00 மணிவரை சிரார்த்த பூஜை நடைபெறுகிறது. மற்ற நேரங்களில் எந்தவித பூஜையும் கிடையாது. இத்தலத்து பெருமாள் சிரார்த்த பெருமாள் என்று அழைக்கின்றனர்.



## தல வரலாறு:

இத் திருக்கோயில் ஆற்காடு நவாப் காலத்தில் திவானாகப் பணி புரிந்த ஸ்ரீ யாக்ஞ வல்கியரைக் குருவாகக் கொண்ட சுக்ல யஜுர் வேதத்தை சேர்ந்த யக்ஞ நாராயண ஷர்மா சரஸ வாணி தம்பதிகள் இந்தப் பெருமானின் மீது ஆறாத பக்தி கொண்டிருந்தனர்.

மேலும் இவர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரிப் பணத்தையும் தெய்வ காரியங்களுக்கு செலவு செய்து விட்டதால், அரச தண்டனையை ஏற்க விரும்பாமல் திருவிடந்தை என்னும் திவ்ய தேசத்து திருக்குளத்தில் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர்.

அவர்களுக்கு தங்கள் ஈமக் கடன்களை செய்ய வாரிசு இல்லையே என மனம் வருத்தத்துடன் மரணமடைந்தார்கள். அவர்களுடைய எண்ணத்தை எம்பெருமானே செய்ததாக பெருமாள் சாட்சியம் சொன்னார்.

அந்த திவானின் வேண்டுகோளுக்கு இணங்க சந்ததிகள் இல்லாருக்கும் ஸ்ராத்தம் செய்ய இயலாதவர்களுக்கும் தானே முன்னின்று ஸ்ராத்தம் செய்து வைப்பதாக எத்தனித்து குதப காலம் என்னும் பித்ரு வேளையில் (12 மணி முதல் 1 மணி வரை) ஒரு காலம் மட்டும் ஆராதனம் ஏற்று விரதமிருக்கிறார்.

## பெருமாளுடன் ஸ்ராத்தம்

இங்கு ஸ்ராத்தம் செய்ய விரும்புபவர்கள் பித்ரு வேளையில் நடக்கும் பூஜையில் தங்கள் பித்ருக்களுக்காக சங்கல்பம் செய்து கொண்டு சுவாமியிடம் சமர்ப்பிப்பதே ஸ்ராத்த சம்ரக்ஷணம் ஆகும்.

இத்தலத்தில் சிரார்த்தம் செய்பவர்களுடன் பெருமாளும் சேர்ந்து சிரார்த்தம் செய்வதாக ஐதீகம்.

## பிரசாதம்:

சிரார்த்தம் முடிந்ததும் ஸ்ராத்த ஸம்ரக்ஷண நாராயண ஸ்வாமிக்கு வெண் பொங்கல், தயிர் சாதம் அதனுடன் பிரண்டையும் எள்ளும் சேர்த்த துவையலும் நிவேதனமாக படைக்கப்படுகிறது.

இத்தலத்தில் சிரார்த்தம் செய்த அன்பர்களுக்கு அந்த பிரசாதத்தையே மதிய உணவாகவும் வழங்கப்படுகிறது.

வெண் பொங்கள், தயிர் சாதம், பிரண்டை எள்ளு சேர்த்த துவையலை மட்டுமே ஏற்று பித்ருக்களை திருப்தி செய்கிறார் ஸ்ராத்த ஸம்ரக்ஷண நாராயணர்.

## பலன்கள்:

தினமும் நடை பெறும் இந்த பூஜையில் அவரவர் பித்ருக்கள் திதியிலோ, அமாவாசை, ஏகாதசி போன்ற திதிகளிலோ அல்லது என்று முடியுமோ அன்று சிரார்த்த பூஜையில் கலந்து கொள்ளலாம். ராமேஸ்வரம், காசி, கயா போன்ற தலங்களில் ஸ்ராத்தம் செய்த பலனைக்கொடுக்கும்.

## அனாதைகளுக்கும் சிரார்த்தம்:

அனாதையாக மரணமடையும் அனைவருக்கும் இத்தலத்து பெருமாளே சிரார்த்தம் செய்வதாகவும் கூறப்படுகிறது.

## முன்பதிவு:

இத்தலத்தில் சிரார்த்த பூஜை செய்வதற்கு முன்பதிவு செய்துவிட்டுச் செல்ல வேண்டும். சிரார்த்தம் முடிந்ததும் வழங்கப்படும் பிரசாதத்தை முன்கூட்டியே தயாரிக்க ஏதுவாக அன்பர்கள் முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும் என்று ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

## இத்தல முகவரி:

Sri Sampath Bhattacharyar,
Brahmana street, Nenmeli and post,
Via Nandham, Chengalpat - 603002.
Kanchipuram District. Ph : 27420053.

மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 5,200க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை. தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய
aanmeegamalar@gmail.com
whatsapp: 7299992699

# பித்ரு தோஷம் உள்ளதா? எவ்வாறு அறியலாம்?

குடும்பத்தில் வாழ்ந்து மறைந்த முன்னோர்களை பித்துருக்கள் என்கிறோம். அவர்களுடைய ஆத்மா சாந்தி அடையாததால் வருகிற தோஷம் பித்துருதோஷம், இந்த தோஷம் நமக்கு உள்ளதா என்பதை எளிமையாக கண்டறிய முடியும்.

ஜாதகத்தில் கண்டறிவது:

ஜாதகத்தில் சூரியன் அல்லது சந்திரன் ராகுவுடனோ அல்லது கேதுவுடனோ எந்த இடத்தில் சேர்ந்திருந்தாலும் பித்துருதோஷம் உண்டு.

பரிகாரம்:

ராமேஸ்வரம் சென்று திலஹோமம் செய்வதும், கயா சிரார்த்தம் செய்வதும், காசி, அலகாபாத் சென்று திவசம் செய்வதும், திருவெண்காடு சென்று திதி கொடுப்பதும் இந்த தோஷத்திற்குப்பரிகாரம்.

திலஹோமம்:

குடும்பத்தில் யாரேனும் விபத்துக்களில் இறந்திருந்தாலோ அல்லது தற்கொலை செய்து கொண்டிருந்தாலோ மட்டும் தில்ஹோமம் செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் இயற்கை மரணம் அடைந்திருந்தால் திலஹோமம் செய்ய வேண்டியதில்லை.

தோஷத்தினால் ஏற்படும் தீயவிளைவுகள் :

1.பித்ரு தோஷம் உள்ளவர்களுக்குதிருமணம் நடக்காது அல்லது மிகவும் தாமத மாக நடக்கும். விவாகரத்து ஏற்படலாம் அல்லது அன்னியோன்னியம் இராது.அல்லது குழந்தைபாக்கியம் இருக்காது.

2. ஒரு சிலருக்கு கடுமையான உடல் உபாதை. மனநோய் காரணமாக தாம்பத்ய வாழ்க்கை பாதிக்கும்.

3. ஒரு சிலருக்கு பலமுறை திருமணம் நடக்கவும் வாய்ப்புண்டு.

4. கலப்புத்திருமணம், ரகசியதிருமணம் நடக்கவும் வாய்ப்புண்டு.

தோஷம் வர பல்வேறு காரணம்:

1.கருச்சிதைவு

2. பெற்றோர்களை இறுதிக்காலத்தில் கவனிக்காதது.

3. இளைய தாரத்துப்பிள்ளைகள் மூத்தோருக்கு திதி தராதது.

4. தந்தைக்கு எத்தனை தாரம் இருந்தாலும் அனைவருக்கும் தவறாமல் திதி தர வேண்டும்.

5. ஆண்வாரிசு இல்லாத சித்தப்பா, பெரியப்பா, அத்தை, சகோதரர், ஆகியோருக்கு திதி கொடுக்காவிட்டால் வரும்.

6. துர்மரணம் அடைந்தவர்களுக்கு திதி கொடுப்பதோடு மட்டுமின்றி கயாசென்று சிரார்த்தம் செய்யாவிடில் பித்துரு தோஷம் வரும்.

7. தோஷத்தில் மிக கொடிய தோஷம் பித்துரு தோஷம்.

இவர்களது குடும்பம் ஜோதிட ரீதியில் எவ்வளவு அதிஷ்டமான கிரகநிலைகள் பெற்று இருந்தாலும் அந்தப்பலனை இவர்கள் அடைய முடியாமல் பித்துருக்களும், பித்துரு தேவதைகளும் தடை செய்வார்கள்.

பித்துருக்களின் சாபம் கடவுள் நமக்கு தரும் வரங்களையே தடுத்து நிறுத்தும் தன்மையுடையது.

பரிகாரம்:

சிவபெருமானுக்கு சந்தன அபிஷேகம் செய்யவும். இந்த அபிஷேகம் அமாவாசையன்று செய்யவும். இந்த அபிஷேகத்தைப்பார்த்த நாள் முதல் உங்கள் பித்துருதோஷம் விலகும்.

சிவன் கோயில் சென்று அபிஷேகம் செய்ய இயலாதவர்கள்

100 கிராம் பச்சரிசி, அகத்திக்கிரை, 50 கிராம் கருப்பு எள், 100 கிராம் வெல்லம், 1 வாழைக்காய் ஆகியவற்றை அமாவாசை அன்று பசுமாட்டிற்கு கொடுக்க பித்துரு தோஷம் நீங்கும். தொடர்ந்து 9 அமாவாசைக்கு இந்த எளிய பரிகாரத்தை செய்ய வேண்டும். இதனால் பித்துரு தோஷம் முழுமையாக நீங்கும்.






## பல்வேறு இடையூறு தீர



உலகம் முழுவதும் பல்வேறு பறவைகள் இருந்தாலும் குறிப்பிட்ட ஊரில்தான் சில பறவைகளை காணமுடியும். ஆனால், காக்கை உலகம் முழுவதும் பரவி இருக்கும் ஒரே பறவை இனமாகும். இந்த காக்கையை சனிபகவானின் வாகனமாக மட்டும் பார்க்காமல், நமது முன்னோர்களின் வடிவான பித்ருக்களாகவும் வழிபட்டுள்ளனர் நமது முன்னோர். தொடர்ந்து பல்வேறு பிரச்சனைகளால் உழல்பவர்கள் தினமும் காக்கைக்கு ஒரு பிடி உணவை அளித்தால் அவர்களின் பிரச்சனையின் தீவிரமும் பிடியளவு விதம் கரையத்துவங்குவதாக முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்த பழக்கம் மெதுவாக மறைந்து தற்போது அமாவாசை, மாஹளய அமாவாசை போன்ற நாட்களின் மட்டும் காக்கைக்கு உணவிடுகிறோம். முன்னோர் பழக்கத்தை நாமும் பின்பற்றினால் பிரச்சனைகளின் தீவிரத்திலிருவிடுபடுவோம்.

Bhaan raja graphics
Specialist in
Book, Wrapper, Layout, logo, magazine work
Tamil & English
Cell: 8939499598 E-mail: bhaanrajagraphics@gmail.com
Advt.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

எங்கள் பணிக்கு....

# அன்பர்களின் ஆதரவு முக்கியம்...

ஆன்மிகமலர்.காம் சார்பில் வெளிவரும் நமது புத்தகத்தின் முதல் இதழுக்கு அமோக ஆதரவு... பல அன்பர்கள் தொலைபேசியிலும், வாட்சப் மூலமும் வாழ்த்துக்கள் தெரிவித்த வண்ணம் உள்ளனர். அந்த அன்பர்களுக்கு சிரம்தாழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்....

நமது அடுத்த இதழின் பயணம் துவக்கத்தின் முன்பு வரை 2600 வாசகர்களை பெற்றிருந்தோம் தற்போது வாசகர்களின் எண்ணிக்கை 5000த்தை தாண்டியுள்ளது மிகுந்த மகிழ்ச்சி. அத்தனை வாசகர்களுக்கும் இ-மெயில் மூலம் நமது ஆன்மிகமலர்.காம் இதழை மிகுந்த கவனத்துடன் அனுப்பி வருகிறோம். நமது இந்தப் பணியை இன்னும் விரிவுப்படுத்த விரும்புகிறோம்.

இந்து சமய ஆன்மிகத்தில் நாட்டம் உள்ள அனைத்து அன்பர்களும் நமது "ஆன்மிகமலர்.காம்" மெயில் புத்தகத்தை பெற வேண்டும் என்பது எங்களது பணியின் நோக்கம்.

எங்களின் இந்த நோக்கத்திற்கு வாசகர்களாகி நீங்களும் ஆதரவை தந்தால், நீங்களும் எங்கள் சேவையில் இணையலாம். வாசகர்கள் அனைவரும் நமது இதழைப் பற்றி உங்களுக்கு தெரிந்த ஆன்மிக அன்பர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை நமது வாசகர்களாக என்ன செய்ய வேண்டும் என்ற வழிமுறையை தெரிவியுங்கள். மேலும் சமூக வலைதளங்களிலும் நமது இதழைப் பற்றிய செய்தியை பரப்பினால் அதன் மூலம் பல ஆன்மிக அன்பர்களை நமது வாசகர்களாக இணைக்க முடியும். இந்த பணி செய்ய அன்பர்களும், வாசகர்களாகிய உங்களின் ஆதரவு எங்களுக்கு அவசியம் தேவை.

மேலும் ஆன்மிக பயணம் மேற்கொள்ளும் அன்பர்கள், செல்லும் கோவிலைப்பற்றி யாரும் அறியாத செய்திகள் இருந்தால் எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். இதன்மூலம் அந்த கோவிலின் சிறப்புகளை தெரியாத ஆன்மிக அன்பர்கள் தெரிந்து கொள்ள உதவிகரமாக இருக்கும்.

மேலும் உங்களுக்கு தெரிந்த அரிய ஆன்மீக செய்திகளை, எங்கேயோ... எப்போதோ, படித்த, பயன்தரும் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டாலும் மற்றவருக்கு அது பயன் படுவதாக இருக்கும். இந்து மதத்தின் பல்வேறு தகவல்களை மற்றவர் அரியா வண்ணம் பூட்டி வைத்ததால்தான் பல்வேறு புல்லுருவிகள் நமது மதத்தை இன்றுவரை இழித்து, பழித்து பேசுகின்றனர்.

இந்த நிலையை மாற்ற எங்களுடன் நீங்களும் கை கொடுங்கள்...

ஆன்மிகமலர்
மெயில் புக்

மேலும் வியாபார அன்பர்கள் தங்கள் நிறுவனம் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை நமது இதழில் பிரசுரிப்பதன் மூலம் எங்களின் சேவைக்கு விளம்பரம் மூலம் வரும் தொகை உதவிகரமாக இருக்கும்.

நமது இதழில் முக்கியமான ஆசிரியர் குழுவில் இணைய விருப்பமுள்ள, ஆன்மிக சேவை புரியும் நோக்கம் உள்ள அன்பர்களை வரவேற்கிறோம்.

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் நமது இதழுக்கு நல்ல ஆதரவு இருப்பதால் எங்களின் முயற்சியை இன்னும் மென்மேலும் விரிவுபடுத்த விரும்புகிறோம். ஆன்மிக அன்பர்களான எங்களது வாசகர்கள் இதுகுறித்த பயனுள்ள வழிமுறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். ஒரு சில அன்பர்கள் கூறிய சில தகவல்களை நாங்கள் இந்த இதழில் செயல்படுத்தியுள்ளோம். ஒரு சில தகவல்களை




செயல்படுத்த முயற்சிக்கிறோம். ஆன்மிக சம்பந்தப்பட்ட விஷயங்களின் ஆர்வமுடன் செயல்படும் தன்னார்வலர் அமைப்பைச் சேர்ந்த அன்பர்கள் தங்களது சேவை குறித்து மற்றவர்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், உங்களைப் பற்றிய குறிப்பு, நீங்கள் செய்யும் சேவை, சேவையின் போது எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் எங்களை தொடர்பு கொண்டால், அதை மற்ற அன்பர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் நமது இதழில் வெளியிடுகிறோம்.

அடுத்த இதழின் பணி துவங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் 1-ஆம் தேதியும் 15-ஆம் தேதியும் நமது இதழ் உங்களின் இ-மெயில் முகவரிக்கு வந்து சேரும், எனவே அன்பர்கள் தவறாமல் மேற்கண்ட தேதிகளின், நமது இதழை எதிர்நோக்கி காத்திருக்கலாம்.

எங்கள் பணி சிறக்க அன்பர்களாகிய உங்கள் ஆதரவு முக்கியம்.... எங்கள் சேவை உங்களுக்கு பிடித்திருந்தால் மற்றவருக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள், நன்றி...

– ஆசிரியர்

ஆன்மிகமலர்
மெயில் புக்

## தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com

# திருமாலுக்குரிய நான்கு குணங்கள்

திருமாலுக்குரிய குணங்களாகக் கூறப் பெறுவனவற்றுள் நான்கு குணங்கள் மிகச் சிறப்பாகப் போற்றப் பெறுபவை.

அவை

1. வாத்சல்யம்,
2. சுவாமித்துவம்,
3. சௌசீல்யம்,
4. சௌலப்யம் என்பனவாகும்.

**வாத்சல்யம்:** கன்றிடம் தாய்ப்பசு கொள்கிற அன்பாகும் திருமாலுக்குரிய இக்குணம் கண்ணன் அவதாரத்திலே மிகுதியாக வெளிப் படுகிறது. குசேலரிடத்திலும் பாண்டவர் மற்றும் திரௌபதியிடமும் மிகுதியாகக் காட்டினார். அர்ச்சுனனுக்குப் போர்க்களத்தில் அவனது குற்றம் நோக்காது உண்மைப் பொருளின் சிறப்பை உணர்த்திய திறத்தால் அவனுடைய வாத்சல்ய குணம் விளங்குகிறது.

**சுவாமித்துவம்:** கடவுளர்க்கெல் லாம் தலைமைத் தன்மை உடைய வனாகும் சிறப்பைக் கூறுவது. இச் சிறப்பு அனைத்து அவ தாரங்களிலும் வெளிப்பட்ட போதிலும் கண்ணன் அவதாரமே அத்தகைய சிறப்புக்கு உறைவிடமாக இருக்கிறது. பகவத் கீதையை உரைக்கையில் தன்னுடைய கடவுள் தன்மையை உணரும் பொருட்டாக அர்ச்சுனனுக்கு பரத்துவத்தை விளக்கியமையால் இக்குணத்தின் சிறப்பு விளங்குகிறது.

**சௌசீல்யம்:** ஏற்றத் தாழ்வின்றி உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி கொண் டிருக்கும் நட்பைக் குறிப்பது. இக்குணமும் கண்ணனுக்கு மிகுதியாக இருந்தது.

**சௌலப்யம்:** இறைவனின் எளிமை நிலையைக் குறிப்பது. உலக மாயைக்குக் கட்டுண்ணாத திருமால் மனித வடிவில் வந்து தன் உடலை மக்களின் கண்களுக்கு இலக்காக்கிய நிலையே எளிமைக்கு எடுத்துக்காட்டாகும்



Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699





# செந்தூரத்தை விரும்பிய அனுமன்

ஆஞ்சநேயர் இருக்கும் ஆலயங்களில் பெரும்பாலும் பிரசாதமாக செந்தூரத்தை வழங்குவார்கள். மேலும் ஆஞ்சநேயர் உடல் முழுவதும் செந்தூரத்தை பூசி ஆராதிப்பதை பார்த்திருக்கிறோம். இதற்கு சுவாரஸ்யமான ஒரு காரணம் உண்டு.

ராமராஜ்யம் நடைபெற்றுக் கொண் டிருந்த சமயத்தில், அரசவையில் கலந்து கொள்ள சீதா தேவி தயாராகிக் கொண் டிருந்தார்.

அப்போது ஒரு வெள்ளிச் சிமிழிலிருந்து சிறிது செந்தூரத்தை எடுத்து தன் நெற்றி வகிட்டில் இட்டுக் கொண்டார்.

சீதாதேவியை அரசவைக்கு அழைத் துச் செல்ல ராமனின் சேவகனான அனுமன் இதை கவனித்தார்.

“தாயே உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?” என்று கேட்டார்.

சீதா தேவியும் “தாராளமாக கேள்” என்றார்..

“நீங்கள் ஏன் தினசரி உங்கள் வகிட்டிலும் செந்தூரை வைத்துக் கொள்கிறீர்கள்” என்றார். .

“என் கணவர் நீடூழி வாழ வேண்டும் என்பதற்காக” என்றார்.. சீதா தேவி.

பிறகு அனுமன் சீதா தேவியை அரசவை வாயில் வரை சென்று விட்டு விட்டு..

“தாயே நீங்கள் செல்லுங்கள் நான் இதோ வந்து விடுகிறேன்” என்று கூறிவிட்டு சென்று விட்டார். சீதை தன் பணிப்பெண்களுடன் வருவதை கண்ட ராமன்.. “அனுமன் எங்கே?” என்று கேட்க..

“சற்று நேரத்தில் வந்துவிடுவதாக கூறி அவசரமாக சென்றார்” என்று சீதை கூறினார்.

சில நிமிடங்களில் தன் உடல் முழுவதும் செந்தூரைப் பூசிக் கொண்டு அரச வைக்கு வந்தார் அனுமன் ..

“அனுமா.. இது என்ன கோலம்?” என்று ராமன் கேட்க..

அதற்கு அனு மன் ..

“தெய்வமே.. அன்னை நெற்றி வகிட்டில் வைத்துக் கொள்ளும் சிறு செந்தூரம் தங்களின் நீண்ட ஆயுளுக்கு வழி வகுக்கும் என்றால்... நான் தங்களின் பரிபூரண ஆயுளுக்காக என் உடல் முழுவதும் செந்தூரத்தை தினமும் பூசிக் கொள்வேன்” என்றார்....

இதைக் கேட்ட ராமனின் கண்கள் அனுமனின் பக்தியையும் வெகுளித்தனத்தையும் நினைத்து கலங்கியது. அனுமனை கட்டித் தழுவிக் கொண்டார்.

கடவுளான ராமபிரான் மீது அனுமனின் பக்தியை வெளிப்படுத்தி காட்டவே அனுமன் சன்னதிகளில் செந்தூரத்தை பிரசாதமாகவும், அனுமன் உடல் முழுவதும் செந்தூரத்தை பூசியும் வழிபடுகின்றனர்.



# நோய் தீர்க்கும் தெய்வங்களும் கிழமைகளும்

எல்லா தெய்வங்களும் நோய் நீக்கும் என்றாலும், சில குறிப்பிட்ட நோய்களுக்கு இன்ன தெய்வங்களை வழிபட வேண்டுமே என சுதமா முனிவர் சிவ புராணத்தில் விளக்கமாக எழுதியுள்ளார்.

அதன்படி அதற்குரிய தெய்வங்களை அந்தந்த கிழமைகளில் வழிபட்டால் நோய் நீங்கி நீண்ட ஆயுள் பெறலாம் என்பது ஐதீகம்.

அம்மை நோய்: மாரியம்மன் ஞாயிற்றுக்கிழமை.

வயிறு சம்பந்தமான நோய்கள்: தட்சிணாமூர்த்தி, முருகன் வியாழன், செவ்வாய்.

ஆஸ்துமா மற்றும் சுவாசக் கோளாறுகள்: மகா விஷ்ணு சனிக்கிழமை.

ஆயுள், ஆரோக்கியம்: ருத்திரர் திங்கட்கிழமை.

எலும்பு சம்பந்தமான நோய்கள்: சிவபெருமான், முருகன் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை.

கண் சம்பந்தமான கோளாறுகள்: சிவபெருமான், முருகன், பிள்ளையார் திங்கள், செவ்வாய், புதன்.

காது மூக்கு தொண்டை நோய்கள்: முருகன் செவ்வாய்

சொறி, சிரங்கு, படை போன்ற தோல் நோய்கள்: சங்கர நாராயணர் வெள்ளிக்கிழமை.

தலைவலி, ஜுரம்: ஜுரஹரேஸ்வரர், பிள்ளையார் திங்கள், புதன்கிழமை.

நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு: முருகன் செவ்வாய்.

பெண்களுக்கான மாதப் பிரச்னைகள்: ராஜராஜேஸ்வரி, வள்ளி, ஸ்ரீரங்கநாதர் ஞாயிறு, செவ்வாய், சனிக்கிழமை.

பித்தப்பைக் கோளாறுகள்: முருகன் செவ்வாய்.

புற்றுநோய்: சிவபெருமான் திங்கட்கிழமை.

மாரடைப்பு, இதயக் கோளாறுகள்: துர்க்கை, சக்தி, கருமாரி, இதயாலீஸ்வரர் திங்கள், ஞாயிற்றுக்கிழமை ராகு காலம்.

ரத்த சோகை, உயர் மற்றும் குறை ரத்த அழுத்தம்: முருகன் செவ்வாய்க்கிழமை.

வாதக் கோளாறுகள்: சனி பகவான், சிவபெருமான் சனிக்கிழமை ராகு காலம்.

வாயுக் கோளாறுகள்: ஆஞ்சநேயர் சனிக்கிழமை.

